# அம்மா அப்பா

## பாகம் 2

# அம்மா அப்பா

## பாகம் 2

✣ ✣ ✣

மறு பிறவி இருந்தால்
செருப்பாக பிறக்கவேண்டும்,
என் அம்மா காலில்
மிதி பட அல்ல.
என்னை சுமந்த அவளை
ஒரு முறை நான்
சுமப்பதற்காக!

தோளில் உயர வைத்து
தான் பார்த்ததை விட
அதிகம் உலகை
பார்க்க வைப்பவரே
அப்பா!

யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும்
நகல் எடுத்துக் கொள்ளலாம்,
வியாபார நோக்கு இல்லாதவரையில்.
நல்ல விஷயங்கள் பரவட்டுமே !

புத்தகம் அச்சிடுபவர் :
**ராஜ்குமார் பிரிண்டர்ஸ்**
புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017.
செல் : 98651 13112

# அம்மா அப்பா - பாகம் 2

திருச்சிராப்பள்ளி – 1
15.03.17

## முன்னுரை

*அம்மா அப்பா பாகம் 1-ன் முன்னுரையில் எழுதியுள்ளதன் அடிப்படையில் அம்மா அப்பாவைப் பற்றி மேலும் பல கதைகள், கட்டுரைகள், கவிதைகளைத் தொகுத்து மக்கள் படித்துப் பயன்பெறும் வகையில் பாகம் 2ல் வழங்கியுள்ளோம்.*

*இக்கதைகள் எல்லாம் நம்மால் எழுதப்பட்டவை அன்று. ஆசிரியர்கள் பலரால் எழுதப்பட்டு பல்வேறு இதழ்களில் வெளியானவைகள்தான் இவை. அவர்களது அனுமதி இல்லாமல் படைப்புகளை வெளியிடுவதில் ஆட்சேபம் இருக்காது என நம்புகிறோம். கட்டுரைகள் மிக நெகிழ்வாக உள்ளன, நன்றாக உள்ளன, உபயோகமாக உள்ளன என்று யாராவது நினைத்தால் அப்பெருமைகள் அனைத்தும் அந்தந்த ஆசிரியர்களையும், பத்திரிக்கைகளையும் சேரும். சில படைப்புகளின் ஆசிரியர் பெயர் தெரியாததால் அதைக் குறிப்பிட இயலாதது சற்று வருத்தமே!*

*வளரும் தலைமுறையினர் இவைகளைப் படித்து பயன்பெற வேண்டும் என்ற தூய நோக்கத்தின் அடிப்படையில் அடக்கவிலைக்கே வெளியிடப்படுகின்றது. இத்தொகுப்பை யார் வேண்டுமானாலும் நகல் எடுத்துக் கொள்ளலாம். நல்ல கருத்துக்கள் எல்லோருக்கும் போய்ச் சேர்ந்தால் அதைவிட வேறு மகிழ்ச்சி என்ன இருக்க முடியும் !*

*தாய் தந்தையைப் போற்றி வணங்கி*
*அவர்தம் ஆசி பெறுவோம்.*

**தொகுப்பு :**

**B. கனக சபாபதி**
**94430 43426**
bkvaluer@gmail.com

**S. பாலகுமாரன்**
**89034 63858**

# பொருளடக்கம்


| எண். | தலைப்பு | பக்க எண். | எண். | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| 1. | தாய்மையின் சிறப்பு | 1 | 18. | Attachment in Detatchment | 19 |
| 2. | ராஜேஸ்வரி அம்மாள் எழுதிய இரண்டு கடிதங்கள் | 2 | 19. | Mother’s hands | 21 |
| | | | 20. | Take care of them, my lord | 23 |
| 3. | அம்மாவின் அருமை | 6 | 21. | அப்பாவுக்கு என்ன தெரியும் ? | 25 |
| 4. | பிள்ளை மனம் கல்லு | 7 | 22. | அப்பா இன்று இல்லையே ! | 26 |
| 5. | அம்மா ஏன் வந்தாள் ? | 9 | 23. | அப்பா, அடுத்த பிறவியிலும் உனது மகளாகவே பிறக்க வேண்டும் ! | 27 |
| 6. | வலிக்குதடா மகனே....! | 9 | | | |
| 7. | மீண்டும் கிடைக்காத சிம்மாசனம் அம்மாவின் கருவறை | 10 | 24. | அன்பு உள்ள இடத்தில் தான் நம்பிக்கை இருக்கும் | 29 |
| 8. | அம்மாவின் ஆசீர்வாதம் | 11 | 25. | பொறுப்பு | 29 |
| 9. | மாத்ரு பஞ்சகம் | 12 | 26. | தந்தையர்களை சிறப்பிக்கும் வகையில் ஒரு அற்புதமான கவிதை | 30 |
| 10. | அம்மா | 12 | | | |
| 11. | தாய்மை | 13 | 27. | அப்பாக்கள்... | 33 |
| 12. | அம்மா | 14 | 28. | அப்பாவின் கண்கள் | 36 |
| 13. | மனித உடலில் மிகவும் முக்கியமான பாகம் எது? | 15 | 29. | தாய்...தந்தை...தெய்வம் ! | 41 |
| | | | 30. | இளைஞர்களுக்கு படிப்பினை, முதியோர்களுக்கு நம்பிக்கை! | 42 |
| 14. | அம்மாவைத் தவிர வேறு யாரால் முடியும்? | 15 | | | |
| 15. | அன்னையைப் பற்றி அறிஞர்கள் | 16 | 31. | பகவான் நாமா | 43 |
| 16. | தன்னை பலி கொடுத்து மகனை காப்பாற்றிய தாய் | 17 | 32. | பாசமிகு அப்பா | 44 |
| | | | 33. | தேவாம்ருதம் | 46 |
| 17. | எழுபதாயிரத்துக்கு மேல் செலவு | 18 | 34 | Mother and Father cannot be compared | 50 |


* * *

# 1. தாய்மையின் சிறப்பு

இரவு 12 மணிக்கு சாலையில் ஓர் வாடகை கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அந்தக் காரை கையசைத்து நிறுத்தினார்.

'தம்பி ஆஸ்பத்திரி போகணும்.'

'நான் வர முடியாது. சாப்பிட்டுட்டு படுக்கப் போறேன்.'

'என் மகளுக்கு பிரசவ வலி வந்து விட்டது. தயவு செய்து வர மாட்டேன்னு சொல்லிடாதேப்பா' என்றார் அப்பெண்மணி.

'நீங்க இவ்வளவு சொல்றதாலே வர்றேன். 500 ரூபா ஆகும்' என்றான் அந்தக் கார் ஓட்டும் இளைஞன்.

அப்பெண்மணி 500 ரூபாய் என்ன 1000 ரூபாய் கேட்டால் கூட தர சம்மதம் என்பது போல் வேகவேகமாக தலையாட்டி சம்மதிக்க கார் அவர்களுடன் மருத்துவமனைக்கு விரைந்தது.

கார் ரெயில்வே கேட்டை நெருங்கவும், எச்சரிக்கை மணி ஒலிக்க கேட் மூடப்பட்டது. அந்த கர்ப்பிணியின் முனகல் சற்று நேரத்தில் அலறலாக மாறியது. இரண்டு ரெயில் வண்டிகள் எதிர் எதிர் திசையில் கடக்க பத்து நிமிடத்தில் கேட் திறந்தது.

இப்போது கார் சற்று வேகமாக ஓடி மருத்துவமனையில் நின்றது. நடுநிசியின் நிசப்தத்தைக் கிழித்தது அப்பிரசவத் தாயின் அலறல். மூடிய விழிகளில் நீர் மல்க அந்த நடுத்தர வயதுப் பெண்மணி கைகளைக் கூப்பி மகளுக்காக இறைவனிடம் வேண்டினாள். சற்று நேரத்தில் மருத்துவர் வந்து சுகப்பிரசவம் நடந்துள்ளது. ஆண் குழந்தை பிறந்துள்ளதாக தெரிவித்தார்.

அந்த தாய், கார் இளைஞனிடம் 'தம்பி! ரொம்ப நன்றிப்பா. இந்தா நீ கேட்ட பணம்' பணத்தை நீட்டினார்.

'வேணாம்மா...எங்கம்மா என்னைப் பெற எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாங்கன்னு இறைவன் எனக்கு புரிய வச்சிட்டார். பணத்தை நீங்களே வெச்சிக்கோங்க' என்று சொன்னபடி நடக்க ஆரம்பித்தான்.

பின்னர் ஏதோ யோசித்து, போனை எடுத்து ஒரு நம்பரை கண்டுபிடித்து டயல் பண்ணினான்.

'ஹலோ முதியோர் இல்லமா?'

'ஆமா. என்ன இந்த நேரத்துல போன் பண்ணுறீங்க?'

மன்னிக்கவும். நாலு நாளைக்கு முன்னாடி அனாதைன்னு சொல்லி ஒருத்தங்களை உங்க இல்லத்துல சேர்த்தேன் இல்லையா?

அவுங்க அனாதை இல்லை. என்னை பெத்த தாய். நாளைக்கு காலையிலே வர்றேன் அவுங்கள கூட்டிட்டு போக என்று கூறி முதியோர் இல்ல பொறுப்பாளரின் அனுமதியைக் கூட கேட்காமல் போனை கட் பண்ணி விட்டு வண்டியை தீர்க்கமான முடிவோடு ஸ்டார்ட் செய்தான்.

ஆம். நிஜத்தை தரிசிக்கும் ஒவ்வொரு இதயமும், ஒரு மனிதனைப் பிரசவிக்கிறது.

* * *

# 2. ராஜேஸ்வரி அம்மாள் எழுதிய இரண்டு கடிதங்கள்

அன்பு மகன் சிவாவுக்கு, அம்மா ராஜேஸ்வரி எழுதுவது.

நீ என்னை இந்த முதியோர் இல்லத்தில் விட்டுச் சென்று இன்றோடு ஒரு வாரம் ஆகிறது. நீ பத்திரமாக அமெரிக்கா போய்ச் சேர்ந்திருப்பாய் என நினைக்கிறேன்.

அப்போதெல்லாம் மாதம் ஒரு முறை உன் தொலைபேசி அழைப்பு வரும். அந்த வாரத்தில் கோவிலுக்குக்கூட யார் கூப்பிட்டாலும் போக மறுத்துவிடுவேன். ஏனெனில் வெளி இரைச்சலால் உன் பேச்சைச் சரியாகக் கேட்க முடியாது.

ம்....இப்போது யாரும் என்னை எங்கேயும் விரும்பி அழைத்துப் போகக் கூப்பிடுவதே இல்லை. அதனால் இப்போது தொலை பேசியில் பேசினால் இங்குள்ள மயான அமைதியில் உன் பேச்சு நன்றாகக் கேட்கும்.

வேலைக்குப் போகும் நீயும் உன் மனைவியும் என்னை அமெரிக்காவில் வைத்துப் பராமரிக்க வழியில்லை என்று நீ உன் மாமாவிடம், அதான் என் தம்பி ஹரியிடம் புலம்பியதும் விளங்கியது. ஒரு பெண்ணை வேலைக்கு அமர்த்தி என்னைப் பார்த்துக் கொள்வதில் உள்ள சங்கடங்களையும் சிரமங்களையும் நீ அடுக்கியதில் எனக்குக் கண்ணீரே வந்து விட்டது.

அதனால் நீ என்னை முதியோர் இல்லத்தில் சேர்க்கும் முடிவுக்குத் தள்ளப்பட்டாய் என்பதையும் நான் உணர்ந்தேன்.

மேலும் என் தம்பியும் பல விஷயங்களை எனக்கு உணர்த்தினான். இன்னும் சில வருடங்களே உயிரைக் கையில் பிடித்திருக்கப் போகும் என்னை நினைத்து நீ பயப்படாதே. உன் பிள்ளைகளும் கல்லூரிகளில் சேரும் காலம் நெருங்கிவிட்டது. இந்நிலையில் நீ இந்தியா வந்து எனக்காகக் குடியமர்வது சாத்தியம் இல்லை என்பதையும் அறிந்தேன்.

சிவா, நான் நம் வீட்டில் தனித்திருந்தபோதுகூட ஒரு ராணி மாதிரி இருந்தேன். ஆனால் இங்கோ...உடன் இருப்பவர்களின் சோகக் கதைகளைக் கேட்டு, என் உள்ளம் இன்னும் பலவீனமாகிவிட்டது.

வயிற்றில் உதைக்கும் பிள்ளை, சேர்த்து வைத்த சொத்துகளை ஒழித்து, போதை ஏற்றிக் கொள்ளும் மகன்கள், மாமியார் ஸ்தானத்திலிருந்து பணிப் பெண்ணாய் மாறிப் போன பரிதாபம்....இப்படிப் பல.

அந்த வகையில் நீ பத்தரை மாத்துத் தங்கம். என்னை இங்கு நீ சேர்த்துவிட்டு அழுகையை அடக்க முடியாமல்தான் போனாய். நானும் உன்னைப் பார்க்காமலேயே விடை கொடுத்தேன்.

நீ கூறியபடி அக்கா கோகிலாவிடம் சென்றிருக்கலாம்தான். நன்கு படித்துப் பெரிய பதவியிலிருந்தும் குடிகாரனான என் மருமகனின் முன் வேறு வழியின்றிப் போய் நிற்பதை என்னால் ஜீரணிக்க முடியாது. அவரிடம் மாட்டிக் கொண்டு உன் அக்கா தினம் தினம் படும் அவஸ்தைகளே போதும்.

ஆனால் நம் தூரத்து உறவுகளிடம் எல்லாம் என்னைப் பார்த்துக்கொள்ளும்படியும், அதற்கு நீ பணம் கொடுப்பதாகவும் கூறி, என்னை ஒரு காட்சிப் பொருளாய் உருமாற்றியதை என்னால் மறக்கவே முடியவில்லை.

உனக்குத் தெரியாது சிவா. நானும் உன் அப்பாவும் நம் உறவினர்கள் முன் எப்படிப்படட வாழ்க்கையை வாழ்ந்தோம் தெரியுமா? ஆதர்ஷ தம்பதிகளாக நம் உறவுகளின் முன்பு செல்வாக்காக வாழ்ந்தோம். அந்த வாழ்வுக்குக் கிடைத்த திருஷ்டியோ என்னவோ? இன்று வெறும் மணல்மேடாகிப் போய்விட்டேன்.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது என் பேரப் பிள்ளைகள் அமெரிக்காவிலிருந்து ஒரு வாரமாவது வந்து தங்குவார்கள். என்னால் இயன்றளவு அவர்களுக்குப் பிடித்தவற்றைச் செய்து பரிமாறுவேன். இனி அப்படி ஒரு வாய்ப்பு எனக்கு அமையுமா, சிவா?

உன் பிள்ளைகள் கூட அமெரிக்கா வாழ்க்கைக்குப் பழக்கமாகிப் போனவர்கள். உன் அக்கா பிள்ளைகளை நினைத்தால்தான் எனக்கு அழுகை முட்டிக் கொண்டு வருகிறது. இனி ஆயா வீடு என எங்கு போவார்கள்? பாவம், அவர்கள் சிறியவர்கள். அதிலும் இந்தியாவில் வளர்பவர்கள். இனி விடுமுறை நாட்களை எங்கே கழிப்பார்கள்?

உன் அப்பா இறந்தபோது உங்கள் இருவரையும் ஆளாக்க வேண்டிய பொறுப்பு என் மீது இருந்தாலும் எனக்காக என் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற மன உறுதியில் அவரின் இழப்பு கூட என்னைப் பெரிய அளவு பாதிக்கவில்லை. என்னை யார் பார்த்துக் கொள்வது என்று நீயும் உன் அக்காவும் ஒரு சதுரங்க விளையாட்டை விளையாடினீர்கள் பார். அப்போதுதான் என் மன உறுதி சுக்குநூறானது.

பிள்ளைகளுக்குக் கடவுள் நாமத்தைச் சூட்டுங்கள். அப்போதுதான் பிள்ளைகளை நீங்கள் “ராமா, கிருஷ்ணா, கணபதி” என அழைக்கும்போது புண்ணியமும் கிட்டும், கடவுளை அந்நேரம் நினைக்கவும் முடியும் என்றார் ஒரு பெரியவர்.

அதன் பொருட்டே உனக்கு ‘சிவா’ என்ற பெயரிட்டேன். எனக்குச் சீக்கிரம் சிவலோகப் பதவியை அளிக்கும்படி ‘ஓம் சிவாய நம’ என்று தற்போது நாள்தோறும் உச்சரிக்கிறேன். ஆயினும் ‘சிவா’ என்ற மந்திர உச்சாடனையின்போது கடவுளிடம் எண்ணம் செல்லாமல் உன் நினைவே வந்து அழுத்துகிறதடா, நான் என்ன செய்வேன்?

சிவா, உனக்கு நினைவிருக்கிறதா? சிறுவயதில் மாடியிலிருந்து நீ கீழே விழுந்து உனக்கு வலது காலில் சரியான அடி. காலில் கட்டு போடப்பட்டு, உன்னால் நடக்க முடியாதபடியால் “நீ எங்கேயும் போகாதம்மா, என் கூடவே இரும்மா”ன்னு அழுவாய். அந்த ஒரு மாதமும் கங்காரு தன் குட்டியைச் சுமப்பது போன்று உனது பதினோராவது வயதில் என் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியபடி தூக்கிக் கொண்டு திரிந்தேன். ஆனால், எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் என் உயிர் பிரியும் முன் வந்து பார்ப்பாயா?

சிவா என்னால் எழுத முடியாதபடிக்குக் கைகள் நடுங்குகின்றன. என் பிள்ளைகளை நான் எப்படி வளர்த்தேன் எனத் தெரியவில்லை. ஆனால் தம்பி, நீ உன் பிள்ளைகளை நன்கு வளர். ஏனெனில் நாளை உன்னை அவர்கள் வைத்துப் பராமரிப்பவர்களாக இருக்கட்டும்.

சிவா, எல்லோரும் கடிதத்தின் முதலில் தான் நலம் விசாரிப்பார்கள். நான் இறுதியில் வினவுகிறேன். சிவா, என்னை இல்லத்தில் சேர்த்தாயிற்று. தற்போது நீ நலமா ?

உன் அம்மா

**ராஜேஸ்வரி**

இரண்டு மாதங்கள் முழுதாய் உருண்டோடின. தாயிடமிருந்து சிவாவுக்குக் கிடைத்த இரண்டாவது கடிதத்தில் இப்படி எழுதியிருந்தாள் ராஜேஸ்வரி.

அன்புநிறை சிவாவிற்கு,

அம்மா எழுதுவது. மன்னிப்பு கோரி நீ அனுப்பிய மடல் கிடைத்தது மகனே. உண்மையில் சென்ற முறை என் மன அழுத்தத்தைக் குறைப்பதாக எண்ணி உன்னைத் துடிக்கச் செய்து விட்டேனோ என்று பதறுகிறேன் தற்போது.

சிவா, உனக்கு முதல் கடிதம் எழுதி அனுப்பிய பின் தான் எனக்கு இப்படியொரு அனுபவம் கிடைத்தது. இந்த இல்லத்தில் பகவத் கீதையை தினமும் ஓர் அடியவர் உபந்யாசம் செய்து விட்டுப் போகிறார். கீதா உபதேசத்தினால் எனது குறை மனம் நிறை மனமாக மாறியுள்ளது.

உண்மைதான் சிவா. கீதையின் கருத்து என் அகக்கண்ணைத் திறந்துவிட்டது. கீதையை கேட்கக் கேட்க, என் மனம் நிம்மதி அடைகிறது. இப்போது எனக்கு இரவில் நல்ல தூக்கம் வருகிறது. முக்கியமாக உன்னை நான் பெற்று வளர்த்து ஆளாக்கிய பலனைத் திரும்ப உன்னிடமிருந்து எதிர்பார்க்கக் கூடாது என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. இது உன்னை மேலும் குற்ற உணர்ச்சியில் தள்ளுவதற்காக எழுதப்பட்டதல்ல.

உண்மையிலேயே அந்தப் புனித நூலால் என்னிடம் ஏற்பட்ட மாற்றங்களே.

தற்போது கீதையை தினமும் பாராயணம் செய்து வருகிறேன். என் உள்ளத்தில் கீதா வாசகங்கள் வேரூன்றி வருகின்றன. மனக்கவலையால் வாடிக் கொண்டிருந்த எனக்கு இப்போது ஊக்கமாகவும் வறட்டு ஜம்பம் தோன்றும் போதெல்லாம் அதை ஒடுக்குவதற்கும் எனக்கு கீதையின் போதனை பேருதவியாக உள்ளதப்பா.

சிவா, என்னை மன்னித்துவிடு. நான் எப்படி என் குழந்தைகளைப் பாராட்டி, சீராட்டி வளர்க்க விரும்பினேனோ, அது போலத்தான் நீயும் ஆசைப்படுகிறாய். இதில் தப்பில்லை. உன்னுடன் வந்து தங்குவதற்கு என் பாழும் உடல் ஒத்துழைப்பு தரவில்லை. எனக்கு நீங்கள் எவ்வளவு முக்கியமோ அப்படியே உங்களுக்கு அவர்கள் முக்கியம்.

பெற்றவர்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமையை முதலில் செய்ய வேண்டும். அந்தக் கடமையை நீ உன் பிள்ளைகளுக்குச் செய்வதே என்னால் தடைபடும் என எண்ணும்போது எனக்குக் குற்ற உணர்வு மேலோங்குகிறது.

போகட்டும், இனி நடப்பவை நல்லதாகட்டும். சுயநலமற்ற அன்பையே உங்களிடம் நான் செலுத்தினேன் என்று எண்ணியிருந்தேன். மெல்ல மெல்லத் தான் எனக்கே என்னுள் நிகழ்ந்த மாற்றம் தெரிகிறது. என் இறுதி நாட்களில் நீங்கள் எனக்குச் சேவை செய்ய வேண்டும் என நான் நினைப்பது எந்த வகையிலும் எனக்கே நியாயமாகப் படவில்லை.

தம்பி, இப்போதெல்லாம் பிராணனை வாங்கும் மெகா சீரியல்களைப் பார்க்காமல் நூலகத்தில் ஆன்மிகப் புத்தகங்களை எடுத்துப் படிக்கிறேன். மேலும் இங்கு என்னுடன் தங்கியிருப்பவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு எனக்கு இங்கு வேறொரு உலகம் கிடைத்திருக்கிறது சிவா. இவர்கள் மீதும் நான் சுயநலமில்லாத அன்பைச் செலுத்த விரும்புகிறேன்.

இங்கு பூத்துக் குலுங்கும் பூக்களின் மலர்ச்சி என் பேரப்பிள்ளைகளை நினைவூட்டுகிறது. நீயும் என் மருமகளும் உடனிருந்து வழிநடத்தி அவர்களின் முகத்தில் பூக்களின் மலர்ச்சியைப் பாருங்கள்.

என்னுடைய இந்த மாற்றத்திற்குக் காரணமான கீதையை நீ தினமும் ஒரு பக்கமாவது படியப்பா. மேலும் நீ என்னை இங்கு சேர்த்ததால், உன் மீது உண்டான மனவருத்தம் அறவே நீங்கிவிட்டது.

இனி நீ எந்தக் குற்ற உணர்வுக்கும் ஆளாக வேண்டாம். என்னைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் இரு.

முடிக்கும் தருவாய் வந்துவிட்டது.

மகாகவி பாரதியார் கீதை குறித்துச் சொன்ன வரிகளை எழுதி முடிக்கிறேன் தம்பி.

“ஈசனைச் சரணாகதியடைந்து
இகலோகத்தில் மோக்ஷ சாம்ராஜ்யத்தை எய்தி
நிகரற்ற ஆனந்தக் களியில் மூழ்கி வாழும்படி
வழிகாட்டுவதே பகவத் கீதையின் முக்கிய நோக்கம். ஆதலால் இஃது கர்ம சாஸ்த்ரம்; இஃது பக்தி சாஸ்த்ரம்; இஃது யோக சாஸ்த்ரம்; இஃது ஞான சாஸ்த்ரம்; இஃது மோக்ஷ சாஸ்த்ரம்; இஃது அமரத்துவ சாஸ்த்ரம்.

இப்படிக்கு

**உன் அம்மா**

**– பவித்ரா நந்தகுமார்**

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பிப்ரவரி 2015

* * *

# ३. அம்மாவின் அருமை

பழங்காலத்தில் ஒரு நாட்டில் விசித்திரமான ஒரு பழக்கம் இருந்து வந்தது.

பெற்றோர்கள் வயதாகி முதுமையின் காரணமாக ஆற்றல் குறைந்து மற்றவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டால், அவர்களைத் தூக்கிக் கொண்டு போய் உயரமான மலைகளின் மேல் வைத்துவிட்டு வந்துவிடுவார்கள்.

எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ள அம்முதியோர்கள் பசி, தாகத்தினால் தனிமையில் வாடி வதங்கி மடிவார்கள்.

இப்படியான சூழ்நிலையில் ஓர் இளைஞன் முதுமையடைந்த தன் தாயை சுமந்து கொண்டு மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியில் மலை உச்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

தாய், மகன் இருவருமே எதுவும் பேசவில்லை!

ஆனால் சிறிது நேரத்தில் தன்தோளில் இருந்த தாயார் ஏதோ ஒருவித மணம் கொண்ட மரங்களின் சின்னசின்ன கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருவதை மகன் அறிந்தான்!

உடனே, "அம்மா , ஏதோ ஒரு மாதிரியான மரத்தின் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருகிறீர்களே! ஏன்?"என்று கேட்டான்.

அதற்கு தாயார், "மகனே, நீ என்னை மலைமீது விட்டுவிட்டு வீடு திரும்பும்போது வழி தெரியாமல் திண்டாடக் கூடாதல்லவா?

இங்கே போடப்பட்டுள்ள கிளைகளை கவனித்து நடந்தால் வழி தவறாமல் நீ பாதுகாப்பாக வீடு போய் சேரலாம்.

அதற்காகவே கிளைகளை அடையாளமாகப் போடுகிறேன் " என்றாள்.

வயதாகிவிட்ட தன்னை தவிக்கவிட்டுச் சென்றாலும் மகன் பத்திரமாக வீடு போய்ச் சேர வேண்டும் என்று நினைக்கும் பாசமிகுந்த இந்தத் தாயா பயனற்றவர் என்று உள் மனம் கேட்க, அவன் தன் தாயை மீண்டும் தன் வீட்டுக்கே கொண்டு வந்து பாசத்துடன் பராமரிக்கலானான்.

அதன்பின்பு அந்தக் கொடூரமான பழக்கம் அந்த நாட்டை விட்டே ஒழிந்தது.

* * *

# 4. பிள்ளை மனம் கல்லு

இன்றைய காலகட்டத்தில் தாயைக் கவனித்துக் கொள்வதை படித்தவர்கள் கூட பாரமாக உணர்வதைக் காணும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

தனது மகன் எவ்வளவு கொடியவனாக இருந்தாலும் தாய்க்கு அவன் அன்பான சேய்தான். அதை எந்த அன்னையும் இதுவரை மறுத்தது கிடையாது.

ஆனால் மகனோ, எந்த நிலையில் இருந்தாலும் தன்தாய் என்றென்றும் தன் அன்பிற்குரியவள் என்று நினைப்பதில்லை. பெரும்பாலானோர் திருமணமான ஒரு சில மாதங்களிலேயே தனது பெற்றோர்களை பெருஞ்சுமையாக நினைக்கிறார்கள்.

**சம்பவம் 1 :**

அவர்கள் அண்ணன் தம்பி மூன்று பேர். அந்த மூன்று பேரும் வயதான தனது தாயை சுமை எனக் கருதுகிறார்கள்.

தந்தை இறந்து சில வருடங்களே ஆகியிருந்தன. மூன்று பேருக்கும் வாக்குவாதம். "நான் ஏன் எனது வீட்டில் அன்னையை வைத்திருக்க வேண்டும்? நீ உனது வீட்டில் வைத்துக்கொள்" என்று ஒருவன்.

மற்றொருவனோ, "நானும் எனது மனைவியும் வேலைக்குச் செல்கிறோம். அம்மா என் வீட்டிற்கு வந்தால் அவர்களைக் கவனித்துக் கொள்ள ஆள் வேண்டும். அதற்கு எனக்கு வசதிப்படாது" என்று கூறுகிறான்.

"எனக்கு வருமானம் போதாது. எனவே அதிகப்படியான ஒருவரை என்னால் பராமரிக்க முடியாது" என்று மூன்றாமவனும் விவாதம் செய்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

ஒவ்வொரு மகனின் வீட்டிலும் அந்தத் தாய் ஒருமாதம் தங்குவது என்று முடிவாயிற்று. 28 நாட்கள் வரும் பிப்ரவரி மாதத்தையும் 30 நாட்கள் வரும் ஒருசில மாதங்களையம் ஒருவன் குறித்துக் கொடுத்தான்.

மற்றவனோ "குறைவான நாட்கள் உள்ள மாதங்களையெல்லாம் நீயே எடுத்துக் கொண்டால் எப்படி? 30 நாட்கள் வரும் மாதங்களை மூன்று பேரும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்வோம்" என்று சமாதான மாயிற்று.

தாயை மகன்கள் கவனித்துக் கொள்ளும் அன்பு (வம்பு) இத்துடன் நிற்கவில்லை. ஒப்பந்தம் இன்னும் தெளிவாக இருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்.

பத்துமாதம் சுமந்து பெற்ற தாயை ஒருமாதம் முடியும் நிலையில் 30 அல்லது 31ஆம் தேதி இரவே தம்பியின் வீட்டிற்கு அனுப்பி விடுவதாகக் கூறுகிறான் ஒருவன்.

அதெல்லாம் முடியாது. ஒன்றாம் தேதியன்று காலை சிற்றுண்டிக்குத்தான் வரவேண்டும் என்றான் மற்றொருவன்.

"நான் கொண்டு வந்து விடமுடியாது. ஒன்றாம் தேதியன்று யாருடைய முறையோ அவர்கள்தான் பேருந்துக்கட்டணம் போட்டு தாயை அவர்கள் வீட்டிற்குக் கூட்டிச் செல்ல வேண்டும்" என்றான் மற்றொருவன். இத்தகைய தாய்ப் பாசத்தை என்னவென்று சொல்வது!

**சம்பவம் 2 :**

மாடு கன்றை விற்று மகனைக் கணினிப் படிப்பு படிக்க வைத்து மும்பை அனுப்பி அங்கிருந்து அமெரிக்கா அனுப்பி வைத்தாள் அந்தத் தாய்.

தந்தை இறந்து சில வருடங்களே ஆகியிருந்தன. சொந்தவீட்டோடு ஒரு சில ஏக்கர் விளைநிலம் இருந்தது. விதவைத்தாய் அதைப் பராமரித்து ஜீவனம் நடத்தி வந்தாள்.

அமெரிக்க மகனுக்குத் திருமணமும் செய்து வைத்தாள். ஆரம்பத்தில் அடிக்கடி போனில் பேசி வந்தவன் பிறகு தாயோடு போனில் பேசவதைக்கூட நிறுத்தி விட்டான்.

பெற்ற மனமோ 'மகனுக்கு என்ன நேர்ந்ததோ' என்று பரிதவித்துக் கொண்டிருந்தது. ஒருசில மாதங்கள் கழித்து அந்த மகன் தாயோடு திடீரென்று அன்பு பொங்க பேச ஆரம்பித்தான். தாயோ மகன் திருந்திவிட்டான் என்று மனமுருகினாள்.

ஒருநாள் போனில் அழைத்த மகன் தாயிடம், "எதற்காக அம்மா நீங்கள் தனியாக அந்த கிராமத்தில் துன்பப்பட வேண்டும்? நான் உங்களை அமெரிக்காவிற்கு அழைத்துக் கொள்ளலாம் என்று திட்டமிட்டிருக்கிறேன்" என்று கூறி விரைவில் வருவதாகவும் கூறினான்.

தனிமையில் வாடிய அந்தத் தாய்க்கு ஆனந்தமோ ஆனந்தம்! சுற்றி இருந்தவர்கள், உறவினர்கள் அனைவருக்கும் "நான் அமெரிக்கா சென்று மகனோடு இருக்கப் போகிறேன்" என்று அறிவித்தாள்.

அந்த அன்பு மகன் வந்தான். நிலம், வீடு, வாசல் என்று அனைத்தையும் விற்றுவிட்டு அமெரிக்கா சென்று செட்டில் ஆகிவிட அம்மாவிடம் சம்மதம் வாங்கினான். அனைத்தையும் விற்றான். பல லட்சங்களைப் பெற்றான். தனது அமெரிக்க வங்கிக் கணக்கில் அதைப் போட்டுக் கொண்டான்.

தனக்கும், தனது அம்மாவிற்குமாக அமெரிக்கா செல்வதற்கு விமான டிக்கெட் வாங்கி அம்மாவிடமும் காட்டினான். அம்மாவும் மகிழ்ந்தாள்.

அமெரிக்கா செல்லும் அந்த குறிப்பிட்ட நாளும் வந்தது. இருவரும் விமான நிலையத்திற்கு வந்தார்கள். அங்கு அம்மாவிற்கு ஐஸ்கிரீம் வாங்கித்தந்தான். ஐஸ்கிரீமை சுவைத்துக் கொண்டிருந்த அம்மா மூன்று மணி நேரத்திற்கும் மேலாகியும் எங்கோ சென்ற மகன் வராததைக் கண்டு வருத்தப்பட்டாள்.

அருகில் இருப்பவரிடம் மகனின் பெயர், அடையாளம், செல்லும் இடம், செல்லும் விமானம் போன்றவற்றைக் கூறினாள். விமானநிலையப் பணியாளர்கள் வந்து அந்த அம்மாவிடம், "அந்த விமானம் 2 மணி நேரத்திற்கு முன்பே சென்றுவிட்டது. உங்கள் மகனும் அந்த விமானத்திலேயே சென்று விட்டார். செல்லும்போது உங்களின் விமான டிக்கெட்டை ரத்துசெய்து அதற்குரிய பணத்தையும் பெற்றுச் சென்று விட்டார்" என்றும் கூறினார். இடிந்து அமர்ந்து விட்டாள் அந்தத்தாய்.

– **ஸ்ரீ ராமகிருஷ்ண ஆனந்தம்**
பிப்ரவரி 2015

* * *

## 5. அம்மா ஏன் வந்தாள் ?

அம்மா ஏன் இந்த ஏழைக்குடிசைக்கு வந்தே? அங்கே தம்பி வீட்ல ஏஸி, கார், நல்ல சாப்பாடு, கலர் டி.வி, மருமகளும் நல்லத்தானே கவனிச்சா? இங்க கொசுக்கடி, நல்ல ஃபேன் கூடக் கிடையாது. ரேஷன் அரிசி, தண்ணீர் கஷ்டம், பாதிநாளும் காலை டிபன் செய்யக்கூட வசதியில்லை. வயசான காலத்துல நீயாவது தம்பியோட சுகமாக இருக்கக் கூடாதா? எனக்குத்தான் படிப்பு வரல்ல. வாய்க்கும் கைக்குமா, ரெண்டு குழந்தைகளோட கஷ்டப் படறேன். உன்னையும் கஷ்டப் படுத்தனுமா? வாசு, ஆதங்கத்துடன் பேசினான்.

வாசு பேசி முடிச்சிட்டியா? நீங்க ரெண்டு பேரும் நான் பெத்த பிள்ளைங்க. நீ இங்கே கஷ்டப் படும்போது நான் மட்டும் சுகத்தை அனுபவிக்க முடியுமா? நான் இங்கே இருந்தா, உன் தம்பி, மாசம் ரெண்டாயிரம் என் செலவுக்குக் கொடுக்கிறான். அதில், இங்கே கொஞ்சம் மளிகை சாமான் வாங்கிப் போடுவேன். உன் பிள்ளைகளுக்குப் ஃபீஸ் கட்டலாம். நான் அங்கே இருந்தா, அவனைக் கண்டிப்பா அண்ணனுக்குக் குடுன்னு சொல்ல முடியாது. அங்கே ராஜ உபசாரம் செஞ்சாலும், உன் குழந்தைகளை விட்டுவிட்டு நான் மட்டும் பாலும், பழமும் சாப்பிட மனம் இடங்கொடுக்குமா? நான் பழுத்து உதிரப்போகும் மட்டை. எனக்கு எதுக்குப் போஷாக்கு? துளிர்க்க வேண்டிய செடிகளுக்குத்தானே உரம் போடவேணும் என்றார் அம்மா. வாசு, தாய்மையின் உன்னதத்தைப் புரிந்து கொண்டான்.

– **ஆர். பார்வதி**
குமுதம் 13.5.2005

* * *

## 6. வலிக்குதடா மகனே....!

உண்டான நாள் முதல்
உண்டதெல்லாம்
குமட்டி குமட்டி யெடுத்து
உயிர் உலர கிடந்தேன்.
வலிக்கவில்லை அப்போது.....

சிசுவாய் வளர வளர
சிறு சிறு உதைகள் வாங்கி
உனக்கும் சேர்த்து
உள்மூச்சு விட்டேன்
வலிக்கவில்லை அப்போது....

நீ பிறக்கையில்
நானும் மறுபடி பிறந்து
உடல் பலம் மொத்தமும்
உருக்கி ஊட்டினேன்
வலிக்கவில்லை அப்போது....

சொட்டு மருந்துக்கும் ஊசிக்கும்
தோளில் உனைச் சுமந்து
பல மைல் நடந்தேன்.
வலிக்கவில்லை அப்போது....

பத்து வயதில் உன்
அப்பன் இறந்துவிட
பத்து தேய்த்து
மாற்றான் அழுக்குகளை உலர்த்தி
படிக்க வைத்தேன்.
வலிக்கவில்லை அப்போது.....

நீ வேலையில் சேர
பணம் வேண்டுமென
சிறுநீரகத்தை விற்றேன்.
வலிக்கவில்லை அப்போது....

‘சே....! இந்த சனியன்
என்னைக்கு ஒழியுமோ...?’
மனைவியுடன் என்
மரணத்தை வேண்டினாய்.
வலிக்கிறதடா மகனே....
உடல் உயிர் எல்லாம்
வலிக்கிறதடா மகனே....!

* * *

# 7. மீண்டும் கிடைக்காத சிம்மாசனம் அம்மாவின் கருவறை

அம்மா சொன்ன அற்புதமான பொய்களில் ஒன்று கடைசி உருண்டையில்தான் எல்லா சத்தும் இருக்கும். இத மட்டும் வாங்கிக்கோடா !

நாம் பெற்ற முதல் இரத்ததானம் எது தெரியுமா? நம் அம்மாவின் பால்தான்.

தன் அம்மா தனக்கு என்னவெல்லாம் செய்தாள் என்பதை மனிதன் கடைசிவரை உணர்வதில்லை. அவன் அதை உணரும் போது அவள் உயிரோடு இருப்பதில்லை.

அம்மா என் அருகில் இருந்தால், கல்பாறை கூட பஞ்சு மெத்தைதான்.

என் முகம் பார்க்கும் முன்பே என் குரல் கேட்கும் முன்பே, என் குணம் அறியும் முன்பே என்னை நேசித்த ஒரே மனித இதயம் என் அம்மா மட்டும்தான்.

ஓர் அம்மாவின் இறுதி ஆசை என் மண்ணறையின் மீது உன் பெயரை எழுதி வை. உன்னை நினைப்பதற்கு அல்ல. அங்கும் உன்னைச் சுமப்பதற்கு!

என்னை நடக்க வைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசையை விட நான் விழுந்து விடக்கூடாது என்ற கவலையில்தான் இருந்தது என் அம்மாவின் கவனம்.

நான் ஒரு முறை அம்மா என்று அழைப்பதற்காக பிரசவ நேரத்தில் ஆயிரம் முறை ‘அம்மா அம்மா’ என்று கதறியவள் தான் என் அம்மா.

குழந்தைகளின் பல்வேறு அழுகைகளின் அர்த்தம் புரிந்த ஒரே அகராதி அம்மா மட்டும்தான்.

தாய்மையின் வலி என்னவென்று எனக்குத் தெரியும். அதனால்தான் அன்று அம்மாவுடன் சேர்ந்து அழுதேன் பிறக்கையில்.

அம்மா...! அப்பா, ஆடம்பரமாய் கட்டிக் கொடுத்த வீட்டை விட, உன் ஆடையில் கட்டித்தந்த அந்த (தொட்டில்) வீடுதான் பெரும் நிம்மிதயைத் தந்தது.

‘அம்மா’ என்பது வெறும் பெயரல்ல, மறப்பதற்கு! அது உயிரோடு கலந்த உதிரத்தின் உறவு.

ஆயிரம் கைகள் என் கண்ணீரைத் துடைத்துப் போனாலும் ஆறாத துன்பம் அம்மாவின் சேலைத் தலைப்பில் துடைக்கும்போதுதான் நீங்கியது.

கடைசி தோசை சாப்பிடும்போது சட்னியை வேண்டும் என்றே அதிகமாக வைத்து சட்னியை காலி செய்வதற்காக, இன்னொரு தோசை வைக்கிறதுதான் அம்மாவின் அன்பு.

நான் நேசித்த முதல் பெண்ணும், என்னை நேசித்த முதல் பெண்ணும் நீதானே அம்மா.

மண்ணறையில் உறங்கச் சொன்னால் கூட தயங்காமல் உறங்குவேன் அம்மா நீ வந்து ஒரு தாலாட்டுப் பாடினால்!

வாழ்க்கையில் தியாகம் செய்பவர் அப்பா. வாழ்க்கையையே தியாகம் செய்பவர் அம்மா.

அம்மா அன்று நம் தொப்புள்கொடியை அறுத்தது, நம் உறவைப் பிரிக்க அல்ல. அது நம் பாசத்தின் தொடக்கத்துக்கு வெட்டப்பட்ட திறப்பு விழா ரிப்பன்.

உலகில் தேடித்தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத ஒரே சிம்மாசனம் அம்மாவின் கருவறை.

* * *

# 8. அம்மாவின் ஆசீர்வாதம்

டி.வி. நிரூபர்களும், செய்தித்தாள் நிரூபர்களும் திரளாகக் குழுமியிருந்தனர். தொழிலதிபர் சண்முக சுந்தரம் தனது அறைக் கதவைத் திறந்து கொண்டு வரவேற்பறைக்கு வந்தார். டி.வி. விளக்குகள் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சின.

"எல்லோரும் கூட்டமாக என்னைப் பார்க்க வந்திருக்கீங்க. என்ன விசேஷம்?"

சிறந்த தொழிலதிபருக்கான விருது உங்களுக்குக் கிடைச்சிருக்கு. மிக சாதாரணமான நிலையில் இருந்த நீங்க, மிக உயர்ந்த நிலைக்கு வந்திருக்கீங்க. உங்க வெற்றியின் ரகசியத்தை எல்லோருக்கும் சொல்லுங்களேன்.

இதுல ரகசியம் ஒண்ணுமே இல்ல. முதலாவது, Punctuality. எந்த ஒரு விஷயத்திலும் நேரம் தவறாமையைக் கடைப்பிடிப்பேன். இது உங்களுக்கு தெரியும்.

இரண்டாவது, நேர்மை. நேர்மையா நடந்து அதனால லட்சக்கணக்கிலே நஷ்டம் ஏற்பட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன். நேர்மையில்லாத வழியில் கோடிக்கணக்கில லாபம் வந்தாலும் அதை நிராகரிச்சிடுவேன்.

மூணாவது, Perfection. எந்தக் காரியத்தையும Perfect ஆகச் செய்யனும்கிறதே நான் உறுதியா இருப்பேன். எங்க ஊழியர்களுக்கும் இதிலே பயிற்சி கொடுத்திருக்கேன்.

இதையெல்லாம் விட என்னுடைய முன்னேற்றத்துக்கு மிக முக்கியமான காரணம்னு நான் கருதற்கு ஒண்ணு இருக்கு.

நிரூபர்கள் மிகுந்த ஆவலோடு அவர் முகத்தைப் பார்த்தார்கள்.

இத்தனை நல்ல இயல்புகளையும் சிறு வயசில இருந்தே என் மனசுல ஆழமா பதிய வச்சவங்க என் அம்மா தான். ஒவ்வொரு நாளும் பூஜை முடிஞ்ச பிறகு என் அம்மா கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கிட்டுத் தான் வெளியில புறப்படுவேன். எனவே என்னோட முன்னேற்றத்துக்கு மூல காரணமே என் அம்மாவின் ஆசீர்வாதம் தான்.

* * *

## தாயன்பு

தண்ணீர் வெந்நீர் ஆனாலென்ன?
நெருப்பை அணைக்கவே செய்யும்!
அன்னை கோபம் கொண்டாலென்ன?
அன்பை விதைக்கவே அதுவும் !

– **எஸ். ரெசிதா பீவி,** நாகர்கோவில்

* * *

## ௯. மாத்ரு பஞ்சகம்

கருத்தரித்த நாள் முதலாய் உள்ளிருந்து
கணந்தோறும் காத்தருள்
சுரந்து சுரந்து
உருவெடுக்கும் என்னுயிரால் ருசியிழந்து
உணவு குன்றி மசக்கை எழ
மெலிந்து மெலிந்து
வருத்துகிற கவலை எழும் வேளைதனில்
வளர்கின்ற பிள்ளைச் சுமை
சுமந்து சுமந்து,
பெருத்தவலி சூழ்ந்துற்ற காலைதனில்
பிரசவத்தின் சூல்வலிக்கு
இறங்கி இறங்கி
திருத்தமொடு பூமிதனில் தவழவிட்டு
சிம்மாசனமடியேற்றி
மகிழ்ந்து, மகிழ்ந்து,
பொறுத்தனை, மலமூத்திரம் கழிந்த காலை,
புன்னகையே பூத்து முகம்
மலர்ந்து, மலர்ந்து
கருத்தொரு நலங்கோடி தந்தனையம்மா!
கடன்சுமை என்னிடத்தே
மிகுந்து, மிகுந்து
உறுத்துகின்ற பான்மைதீரப் பதிலெதுவோ
ஒன்றினுக்கு ஒன்றேனும்
உவந்து, உவந்து
பொருத்தமொரு தீர்த்திட முடிந்திடுமோ
பொற்பாத மலரடிகள்
நினைந்து, நினைந்து,
உருக்கமொடு திருவடிகள் தொழுவதல்லால்
ஒன்றறியேன் அன்னையே!
பணிந்து, பணிந்து வணங்குகிறேன்.

* * *

## ௧௦. அம்மா

முகத்தைக் காணும்
முன்பே நேசிக்கத்
தெரிந்தவள்
**'தாய்'**

* * *

எந்தப் பொய்
சொல்லியும்
அம்மாக்களை
ஏமாற்றிவிட முடியும்
சாப்பிட்டு விட்டேன்
என்கிற
அந்த ஒரு பொய்யைத்தவிர!

* * *

எனக்குக் காய்ச்சல் வந்தால்
மருந்து தேவையில்லை!
அடிக்கடி வந்து
தொட்டுப் பார்க்கும்
அம்மாவின் கையே
போதுமானது!

* * *

நீ அழுவதைப் பார்த்து
உன் அம்மா
சிரித்த ஒரே ஒரு நாள்
நீ பிறந்த நாள் !

* * *

# 11. தாய்மை

அம்மா!

நீ கல்லும் மண்ணும் சுமந்தாய், என்னை உன் கருவறையிலும் சுமந்தாய், வலித்து வலித்து எனை பெற்றெடுத்தாய், பாலூட்டி சீராட்டி எனை வளர்த்தாய்.

அம்மா!

உன் கண்ணுக்குள் வைத்து காத்தாய், என் உணர்வில் கலந்தாய், உதிரத்தால் ஒன்றான தாய் அன்புடன் உணவு கொடுத்தாய்.

அம்மா!

உன் இதயத்தில் இருக்க வைத்தாய், தவழும் போது ரசித்தாய், நடைபழக கற்றுக் கொடுத்தாய், தவறி விழும்போது அரவணைத்தாய்.

அம்மா!

பள்ளிக்கு கல்வி பயில அனுப்பி வைத்தாய், கருத்துடன் படிக்கவைத்தாய், எழுதச் சொல்லிக் கொடுத்தாய், பாட்டு பாடி அழகு பார்த்தாய்.

அம்மா!

என் வளர்ச்சியை கண்டு ரசித்தாய், நல்லவை அல்லவை சொல்லித் தந்தாய், கண்டிப்புடன் பண்பை ஊட்டினாய், கருத்துடன் வாழ சொல்லி தந்தாய்.

அம்மா!

என்னை கல்லூரியில் சேர்த்தாய், கவனமுடன் படிக்க பணித்தாய், உலகத்தை கற்றுக் கொடுத்தாய், உயர்கல்வி படிக்க வைத்தாய்.

அம்மா!

எனக்கு திருமணம் செய்ய முடிவெடுத்தாய். சிறந்த மணாளனை தேடி அலைந்தாய், கிடைத்ததும் அகம் மகிழ்ந்தாய், மனம் போல் மணம் முடித்தாய்.

அம்மா!

என் தாய்மையை உணர்ந்தாய். தங்கத் தட்டில் வைத்து தாங்கினாய், பெயர்த்தியென்றதும் துள்ளிக் குதித்தாய், பேர் சூட்டி செல்லமாய் அழைத்தாய்.

அம்மா!

சுமையையே சுகமானதாய் உணர்ந்தாய், சுமையை சுண்டு விரலால் சுண்டிவிட்டாய். வலித்ததினால் வேதனை அடைந்தாய் இதுவே வாழ்க்கையென உணர்த்தினாய்.

அம்மா!

உன்னின் அருமை பெருமைகளையும், தியாகத்தையும், அர்ப்பணிப்பையும் இத்தருணத்தில்தான் உணர்ந்தேன். நீ எப்படிப்பட்ட போராளி என !

அம்மா!

வாழ்க்கை இதுவென அறிய வைத்தாய், அடுத்த பிறவி உண்டெனில், நீ சேயாய் நான் தாயாகப் பிறக்க அருள் தா இறைவா!

– திருமதி. **கி. ஜீவா அசோகன்**
திருவண்ணாமலை.

* * *

வார்த்தைகள் இல்லாமல் பேசினேன்
கண்கள் இல்லாமல் ரசித்தேன்
காற்றே இல்லாமல் சுவாசித்தேன்
கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன் எங்கே?
என் தாயின் கருவறையில் மட்டுமே!

# 12. அம்மா

அம்மாவை பிரதிபலன் பார்க்காமல் கவனிக்க வேண்டும். அப்படி கவனிக்காமல் விட்டதால் நான் படும் மன உளைச்சலைத்தான் இங்கே கொட்டுகிறேன்.

எங்கள் குடும்பத்தில் அப்பா, அம்மா நான், தங்கை, தம்பி என ஐந்து பேர். எனக்கும் தங்கைக்கும் திருமணம் ஆனதும் அப்பா இறந்து விட்டார். என் தம்பிக்கு வசதியான குடும்பத்துப் பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள். கல்யாணம் முடிந்த கையோடு தனிக் குடித்தனம் சென்று விட்டன். அம்மா மட்டும் வீட்டில். உடல்நிலை சரியில்லாதவர். தனிமை இன்னும் அதிகம் வாட்டியது. அதை தாங்க முடியாமல், என் வீட்டில் சிறிது காலமும் தங்கை வீட்டில் சிறிது காலமும் இருக்கலாம் என்று நினைத்து இருக்கிறார்கள்.

தங்கை வசதியானவள். அவள் அம்மாவை கூட்டிவந்து வைத்து இருக்கட்டும் என்று நான் நினைத்தேன். என் தங்கையோ, அம்மாவை நம்மோடு வைத்துக்கொண்டால் மாமியார் ஏதாவது சொல்லுவார்கள் அக்காவே அம்மாவை கூட்டிப்போய் கவனிக்கட்டும் என்று இருந்து விட்டாள்.

எங்களோடு வந்து கொஞ்சநாள் இருங்கள் என்று ஒருமுறை கூட நாங்கள் சொன்னதோ லெட்டர் போட்டதோ இல்லை. வருகிறேன் என்று சொல்லிவிடுவார்களோ என்ற பயம்தான் காரணம். இப்படிப்பட்ட பிள்ளைகளை பெற்றுவிட்டோமே என்று நினைத்தாரோ, இல்லை யாருக்கும் சிரமம் கொடுக்கவேண்டாம் என்று நினைத்தாரோ தெரியவில்லை. திடீரென காணமால் போய்விட்டார். அதற்குமுன் ஆசிரமங்களை பற்றி விசாரித்தார் என்பது பின்னர்தான் தெரிந்தது. ஒவ்வொரு ஆசிரமமாகச் சென்று பார்த்தோம். அம்மாவைப் பற்றி தகவலே இல்லை. என் அம்மா வைராக்கியம் உள்ளவர். செத்தால்கூட நம் முகத்தில் முழிக்க இவர்கள் தகுதியற்றவர்கள் என்று நினைத்து விட்டார் போலும்.

மூன்று குழந்தைகளை பெற்று வளர்க்க அம்மா என்ன கஷ்டப்பட்டு இருப்பார்? யாராவது பத்து நாட்களாவது வைத்து கவனித்தால் செலவாகும் என்ற மனப்பான்மை மிக விட்டுவிட்டோமே என்று இப்போது பாடாய்ப்படுத்தும் குற்ற உணர்விலிருந்து தப்ப வழிதெரியாமல் தவிக்கிறோம்.

* * *

## அந்திம காலம் !

சுருங்கிய தோலுக்குக் கீழே
பெருகிவாழ்ந்த எங்களின்
அடையாளக் கதையுண்டு...!
வளர்ந்துவிட்ட உங்களின்
புறக்கணிப்பையும், ஒதுக்கலையும்
புன்னகையுடன் ஏற்கப் பழகினோம்....
ஏனெனில்...
அன்புமட்டும் எங்களிடம்
இன்னும் இருக்கிறது.....!
மனசு வைத்து பிள்ளைகள்
வந்து போகும் நாட்களில்....
மனவலி, உடல்வலி மறந்துபோகும்...!
ஞாபக விழுதுகளால்...
தடுமாறி நிற்கிறோம்....!
வாழ்வின் அந்திமத்தை
வரவேற்க விழிபூத்துக் கிடக்கிறோம்...!

**– ஜெ.சி. ஜெரினாகாந்த்**
ஆலந்தூர்

* * *

# 13. மனித உடலில் மிகவும் முக்கியமான பாகம் எது?

ஒரு சிறுவனிடம் அம்மா இந்த கேள்வியைக் கேட்டாள். காதுகள் என்றான் சிறுவன். அம்மா சொன்னாள் "இல்லை மகனே காதுகேளாத கோடிக்கணக்கான பேர் இருக்கிறார்கள், இன்னும் யோசி". சில வருடங்களுக்கு பிறகு அம்மா இதே கேள்வியைக் கேட்டாள். பையன் சற்று வளர்ந்திருந்தான். "கண்கள் என்று பதில் சொன்னான்." அம்மா ஒப்புக் கொள்ளவில்லை நீ வளர்கிறாய் என்பது உண்மைதான். ஆனாலும் இது சரியான பதில் இல்லை. இன்னும் யோசி!

மேலும் சில வருடங்கள் கழிந்தன.திடீரென்று பையனின் தாத்தா, அதாவது அம்மாவின் அப்பா இறந்து போனார். எல்லோரும் இடிந்து போனார்கள். தாத்தா அத்தனை அன்பானவர். அவருடைய இழப்பு எல்லோரையும் பாதித்தது. அம்மா அழுதுகொண்டே இருந்தாள். ஆனால் அந்த சோகமான சூழ்நிலையிலும் மகனிடம் பழைய கேள்வியைக் கேட்டாள். மகனுக்கு லேசான அதிர்ச்சி. என்ன இந்த நேரத்தில் அம்மா இந்தக் கேள்வியைக் கேட்கிறாள். "பதில் சொல்லு இதுதான் சரியான நேரம். உனக்குப் புரியக்கூடிய சமயம். மனித உடலில் முக்கியமான பாகம் எது?" அம்மா மறுபடி கேட்க மகன் புரியாமல் நின்றான். அம்மா பதில் சொன்னாள். "தோள்கள்." மகன் குழப்பமாகக் கேட்டான். தோள்களா? எப்படி அம்மா? அவனுடைய தோளில் சாய்ந்துக் கொண்டு விசும்பினாள் அம்மாள். "பிறர் அழும்போது சாய்ந்து கொள்ள தோள்கள் தானே உதவுகிறது. உலகில் பிறந்து எல்லோருக்குமே அழும்போது சாய்ந்து கொள்ள ஒரு தோள் வேண்டும் மகனே! நம் உடலில் சுயநலமில்லாத பிறருக்கு உதவும் ஒரே பாகம் இதுதான்".

– **கமாலி**

* * *

# 14. அம்மாவைத் தவிர வேறு யாரால் முடியும்?

தாய்மைப் பேறு அடைந்து தன் தாய் வீட்டிற்கு மருமகள் சென்றதால், மகன் கஷ்டப் படுவானே என்று மகன் வீட்டிற்கு வந்தாள் தாய். வீடா அது..நரகம். மேசை எல்லாம் வெறும் தூசி. படிந்திருக்கும் தூசியிலேயே சில டெலிபோன் எண்களைக் குறித்து வைத்திருக்கும் சோம்பேறி மகன். வீடு கூட்டும் விளக்குமாறு ஒட்டடை படிந்து ஒரு சேர் மீது உட்கார்ந்திருக்கிறது.

பரபரப்பாய் வீட்டைச் சுற்றி சுத்தம் செய்தாள் தாய். வீடு குப்பையாக இருக்கிறதே என்று மகனைக் கோபிக்காமல், தன்னைத் தவிர வேறு யார் அவனுக்கு உதவ முடியும் என்ற பச்சாதாபத்துடன் தூய்மை செய்தது அந்தத் தாய்மை. அப்பாடா என்று சுத்தம் செய்த தரையில் மகிழ்வுடன் படுத்துக் கொண்டாள் அந்த அம்மா.

அம்மாவைத் தவிர வேறு யார் வந்தாலும் குப்பையாய் இருக்கிறதே என்று குறை சொல்வார்களே ஒழிய சுத்தம் செய்து குடியிருக்க மாட்டார்கள்.

* * *

# 15. அன்னையைப் பற்றி அறிஞர்கள்

அன்னையை மதிக்காதவன் எவ்வளவு பெரிய அரசன் ஆனாலும் அவன் புழுவுக்குச் சமம்.

– கன்பூசியஸ்

உலகம் அனைத்தையும் ஒரு தட்டிலும் தன் அன்னையை மறுதட்டிலும் வைத்து நிறுத்தினால் உலகின் தட்டுதான் மேலே இருக்கும். – லாங்வெல்

அன்னை அருகில் இருந்தால் எமனுக்கும் நடுக்கம் வரும். – மகாபாரதம்

எல்லோருடைய இடத்தையும் அன்னை வகிக்க முடியும். ஆனால் அன்னையின் இடத்தை யாராலும் வகிக்க முடியாது.

– மெர்சஸ்

தொட்டில் ஆட்டப்படும்போது மிகுந்த மகிழ்ச்சி கொள்பவர் குழந்தையா? அன்னையா?

– நான்ஸி

சிறந்த பல்கலைக் கழகம் அன்னையின் மடிதான். – ஜேம்ஸ் ரஸ்ஸஸ்

அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் உதவமாட்டான். – தமிழ்ப் பழமொழி

தாயிற் சிறந்த கோயிலுமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.

– தமிழ்ப் பழமொழி

கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது. அதனால்தான் தாயைப் படைத்தார்.

– சீனப் பழமொழி

சொர்க்கம் என்பது அவரவர் தாயின் காலடியில்தான் உள்ளது.

– நபிகள் நாயகம்

நீ இந்த உலகிற்கு வர யார் காரணமோ, யாரை இழந்தால் நீ மீண்டும் பெற முடியாதோ, அவளே தாய்! – விவேகானந்தர்

மனித அன்பின் பிறப்பிடம் தாய். மாதா மனம் எரிய வாழாய் ஒருநாளும்.

தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடம்.

தாயின் இதயம் என்றும் வாடாத மலர்.

தந்தையின் பாசம் சவக்குழி வரை; தாயின் பாசம் சிரஞ்சீவியானது.

தாயையும், தந்தையையும் தவிர ஒருவர் எதையும் வாங்கலாம்.

– பைபிள்

வேறு யாரிடம் பெற முடியாதது தாயின் பாசம். தாயே முதல் உலகம். தாயே கண்ணுக்கு தெரிந்த முதல் தெய்வம்.

– V.C.S. சிவராமன்

– **தி ரெட்டியார்ஸ் மெயில்,**
எர்ணாகுளம் (கேரளா)

❋ ❋ ❋

## தாயிடம் பக்தி !

அடிப்படை கல்வியே பெற்றிருந்தாலும், அன்னை மீது கொண்ட பக்தியால் வாழ்வில் உயர்ந்த அரசியல் தலைவர்கள், திரைத்துறையினர், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள் அனைவரையும் எண்ணிப் பாருங்கள் அவர்கள் அனைவரும் தாயிடம் பக்தி செலுத்திய ஒரே காரணத்தினால் முன்னுக்கு வந்தவர்கள் என்பது விளங்கும்.

தினமும் அன்னையை வணங்கி செயல் படுங்கள். வாழ்வில் முன்னேறலாம்.

# 16. தன்னை பலி கொடுத்து மகனை காப்பாற்றிய தாய்

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் இசையரங்கம், ஓட்டல்கள், விளையாட்டு மைதானம் என 6 இடங்களில் ஐ.எஸ்ஐ.எஸ். தீவிரவாதிகள் 7 பேர் கடந்த 13ம் தேதி இரவு பயங்கர தாக்குதல் நடத்தினர். தானியங்கி துப்பாக்கிகளால் அவர்கள் சரமாரி சுட்டு, குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதில் 129 பேர் பலியாயினர். 352 பேர் காயமடைந்தனர். இதில் பட்டாகிளான் இசையரங்கத்தில் நடந்த தாக்குதலில் மட்டும் அதிகபட்சமாக 89 பேர் பலியாயினர். தாக்குதல் நடந்தபோது, அந்த இசை யரங்கத்தில் லூயிஸ் என்ற 5 வயது சிறுவன், அவன் அம்மா எல்சா டெல்பிளேஸ் (35), பாட்டி பட்ரீசினா சான் மார்ட்டின் (61) ஆகியோருடன் இசை நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டிருந்தான்.

இசையரங்கத்துக்குள் நுழைந்த தீவிர வாதிகள் அங்கிருந்தவர்களை சரமாரியாக சுட்டதில் எல்சாவும் சான் மார்ட்டினும், தீவிரவாதிகளின் துப்பாக்கி தோட்டாக் களுக்கு பலியாயினர்.

தாக்குதல் முடிவுக்கு வந்தபிறகு, போலீசார் அரங்கத்துக்குள் நுழைந்து, காயமடைந்தவர் களையும், இறந்தவர்கள் உடலையும் மீட்டபோது, எல்சாவின் உடலுக்கிடையில் அவரது 5 வயது மகன் லூயிஸ், எந்த காயமும் இன்றி சுருண்டு கிடந்தான்.

தனது மகனை தீவிரவாதிகளின் தோட்டாக்கள் துளைக்கக்கூடாது என்பதற்காக, தனது உடலையே மகனுக்கு கேடயமாக்கி, மகனுக்காக தனது உயிரை எல்சா தியாகம் செய்திருக்கிறார். கஷ்டமான நேரங்களிலும் சிரித்துக்கொண்டே இருக்கும் எல்சா, கலாச்சார மற்றும் கலைச்சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்.

மகனை காப்பாற்ற தன்னை மாய்த்துக் கொண்ட எல்சாவின் தியாகம் பிரான்சில் பரபரப்பையும், உணர்ச்சிப்பெருக்கையும் ஏற்படுத்தியுள்ளது.

– **தினமலர்** 19.11.15

* * *

**பெற்றோரின் அன்பு**

மதிப்பு மிக்கது
தூய்மையானது
நம்மீது பேரார்வம் கொண்டது
நமக்கு வழிகாட்டியாக துணையாக உள்ளது
நமது வெற்றிக்கான ஏணியாக உள்ளது
நாம் போற்றிக்கொள்ள வேண்டிய பெரும் புதையலது
எம் வாழ்வில் வழிகாட்ட இறைவா அவர்களுக்கு நீண்ட ஆயுளை அருளும்

# 17. எழுபதாயிரத்துக்கு மேல் செலவு

வாசலில் கிடக்கும் செய்தித்தாளை எடுக்க வந்தான் சங்கர்.

“என்ன சங்கர் சார், ரெண்டு நாளா வீட்ல யாரும் இல்லையா என்ன?” வீடு மூடியே இருந்துச்சே?... சொல்லிக்காம எங்க போயிட்டீங்க? செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த பக்கத்து வீட்டு செல்வம் கேட்டார்.

புதன்கிழமை நைட் என் பையன் பயங்காட்டிட்டான் சார்! மணி ரெண்டு இருக்கும். திடீர்னு வயித்துவலி தாங்காம துடிக்கிறான். என்ன பண்றதுன்னு ஒண்ணும் புரியலை. நாங்க ரெண்டு பேரும் ரொம்ப பயந்துட்டோம். உடனே ஹாஸ்பிடலுக்கு அழைச்சிட்டு போனா அவங்க ஸ்கேன் எடுக்கணும்னு சொல்லிட்டாங்க. அப்புறம் அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட்னு ரெண்டுநாள் அவங்க எல்லா டெஸ்டையும் எடுத்துப் பார்த்தாங்க. அப்புறம் பயப்படும்படி ஒண்ணும் இல்லைன்னு சொல்றதுக்குள்ள எங்களுக்கு உயிரே போயிடுச்சு. அவனுக்கும் வயித்துவலி தானா போயிடுச்சு. நேத்து சாயங்காலம்தான் டிஸ்சார்ஜ் பண்ணி அழைச்சிட்டு வந்தோம். ரெண்டு நாள்ல எழுபதாயிரத்துக்கு மேல செலவாயிடுச்சு. பணம் போனா போகட்டும். பையனுக்கு ஒண்ணுமில்லைன்னு சொல்லிட்டாங்களே. அது போதும் சார். சங்கர் பெருமூச்சு விட்டான்.

“என்ன பேசறீங்க நீங்க?... ரெண்டு மாசத்துக்கு முன்னாடி இப்படித்தான் என் பையனும் வயித்து வலி வந்து துடிச்சான். உங்களை மாதிரியே நாங்களும் பயந்தப்ப, உங்க அம்மாதன், அது சூட்டு வலியா இருக்கம். தொப்புள்ள நல்லெண்ணை வைங்க சட்டுன்னு சரியாயிடும் என்று சொன்னாங்க. நம்பி வைச்சோம். பத்தே நிமிஷத்துல அவன் விளையாட கிளம்பிட்டான். ஏன் இதை உங்க அம்மா உங்களுக்கு அன்னைக்கு சொல்லலையா?....” செல்வம் கேட்டார்.

அம்மா இப்போது முதியோர் விடுதியில் இருக்கிறாள் என்பதை அவரிடம் சங்கர் எப்படிச் சொல்வான்....?

– **தி இந்து**

* * *

# 18. Attachment in Detatchment

When my daughter, the older of my two, wed and left home, I felt a part of me gone.

With a daughter and a son, I know what both mean, differently.

When she was in her teens I felt as if she was my "physical extension"!

So when she left home to set up her own, I felt I lost a limb.

Next time she came to set up her own, I felt I lost a limb.

We too must've given the same shocks to our own parents!

When she said Amma,

she meant her mother-in-law, not me!

I felt she was always in a hurry to go back to her house and not stay with me for a few more days.

That was the first time, it dawned on me that I have to start practising detachment with attachment.

Two years after my daughter's marriage, my son left for higher studies to US.

Having experienced a child's separation once, I was better equipped emotinally.

I plunged head long into various classes held in the city starting from vedanta to healing to ikebana-

I just wanted to be away from home..since my husband was a 24/7 workaholic

My son used to write how he was missing my home cooked food, how he was waitiing to come back to live in Chennai with us..

After a few years, he did come back and we got him married.

He started living separately with his wife and we were also happy that they wanted to be independant from the beginning..

But now, it was all changed!

When in the U.S. he missed my cooking, now if I called him to come over with his wife for a meal, it was always some excuse like "oh, amma, we have other plans for the day, please don't mistake us if we don't drop in today"!

I could see that his priorities had also changed completely.

We talk so many things and give so much advice to others, but when it comes to our own

children, acceptance comes very late. Out next step is to just leave them undisturbed in every way.

It was at that time, I made the following, my ‘new profie’.

In all my relationships, rather interactions, I give my best and do my best to live up to what I say.

My attachment with them is complete.

However, I remain detached in the sense that I do not expect them to reciprocate my affection.

Most importantly, I made a conscious effort, not to interfere or pas judgements on the lives they choose to lead.

My concern for my near and dear ones will not fade with my detachment.

If you let go of the ones you love, they will never go away- this is the beauty of attachment with detachment!

I have learnt to love and let go.

This dictum has developed tolerance in me.

What I let the people live the way they want to, I learn to accept them for what they are.

Most importantly.

I learn to tolerate the world around me and this tolerance brings in me a sense of peace and contentment.

Since both my children live in Chennai. I follow this very strictly, you know why!

Now I have realised that we start growing mentally much more only after the children leave the house and we have to tackle the emotional vaccum, that arises, along with age-related problems.

I specially dedicate this post to my friends, who are totally dependant on their children’s lives, to nurture their own selves emotionally.

Please develop your own interests, hobbies etc, however mundance they seem to be.

We must learn

To love whatever we do

instead of

Doing whatever we love!

***- Sudha Murthy***

❃ ❃ ❃

## 19. MOTHER'S HANDS

A young man want to apply for a management position in a big company.

He passed the first interview and the final decision fell to the company's director.

The director saw in the man's CV that his academic achievements were excellent.

From high school through to his post-graduate research, he always had top marks.

The director asked, "Did you win any scholarship in school?"

The man replied 'None'. The director asked, 'Was it your father who paid for your tuition?'

The man answered, "My father passed away when I was one year old, it was my mother who paid my tuition."

The director asked, "Where did your mother work?"

The man answered, "She worked in a laundry"

The director requested the man to show his hands. The man showed a pair of hands that were smooth and perfect.

The director asked, "Did you ever help your mother wash clothes?"

The man answered, "Never, my mother always wanted me to study. Besides, my mother can wash clothes faster than I can."

The director said, "I have a request. When you go home today, clean your mother's hands, and then see me tomorrow morning."

The man felt that his chance of landing the job was good.

When he went home, he asked his mother to let him wash her hands.

His mother found it strange, but decided to humour her son. She reached out her hands and he began to wash them.

As he did, he felt a tear run down his cheek.

It was the first time he had noticed that his mother's hands were so wrinkled and had so many bruises.

It was the first time he had noticed this pair of hands that had worked hard every day just so he could go to school.

The bruises on the mother's hands were the price she had to pay for his graduation, his academic excellence and his future.

The next morning, the man went to the director's office. The director noticed the tears in his eyes and asked; "Can you tell me what you learned yesterday at home?"

The man answered, "I learned appreciation. Without my mother, I would not be the success I am today. I have come to appreciate the importance of family."

The director said, "That is what I am looking for in a Manager. I want to recruit a person who can appreciate the help of others. You're appointed."

The most important thing to teach your children is the appreciation of hard work and the necessity of sacrifice to get things done.

* * *

## 20. TAKE CARE OF THEM, MY LORD

There were days when my home used to be filled with laughter, arguments, fights, jokes and loads of mischief.

Books used to be strewn all over the show. Pens and books all over and clothes messing the rooms, thrown on the beds. I used to shout at them to clean up their mess.

In the morning, one will wake up and say:

"Mama, I can't find a certain book."

And the other will say: "I can't find my perfume."

And one will say: " Mama where's my homework?"

Everyone used to ask about their lost possessions.

And I will say, "take care of your stuff, be responsible, you have to grow up."

And today I stand at the doorway of the room.

The beds are empty.

All the cupboards have only a few pieces of clothes in them.

And what remains is the smell of perfume that lingers in the air.

Everyone had a special smell.

So, I take in the smell of their perfume for may be it will fill the empty ache in my heart.

All I have now is the memory of their laughs and their mischief and their warm hugs.

Today my house is clean and organized and everything is in its place, and it is calm and peaceful.

But it is like a desert with no life in it. Do not become angry with your kids about the mess.

Every time they come to visit and they spend time with us. When they are ready to leave, they pull their bags and it is as if they tug my heart along with it.

They close the door behind them and then I stand still and think of the many times I shouted at them to close the doors.

Here I am today, closing my own doors. Nobody opens it besides me. Each one gone to a different city or a different country.

All left to find their own path in life.

They have grown up and I wished that they could stay with me forever.

Oh! God...

Take care of them and all other children wherever they may be, because you are their guide and their protector......And always keep them happy.

* * *

**My beloved...**

She is a great creator
When I was in the womb.
She is an ardent teacher
When I began to learn things.
She is a devoted doctor
When I fell ill.
She is an excellent cook
When I take my food.
She is a melodious singer
When I retire to bed.
She is a pious priest
When I offer my prayers.
She is a good governess of my home
She is a skilled gardener..
She is an intelligent foe
When I play chess.
Who is she?
I feel proud and blessed for having been born as her only son

- **R.B. Gowtham Srinivas,** IV
D.A.V. BHEL School, Ranipet

# 21. அப்பாவுக்கு என்ன தெரியும் ?

## தந்தையைப் பற்றி மகன் !

**5 வயது** : என் தந்தையால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை.

**7 வயது** : என் தந்தைக்குப் பல விஷயங்களைப் பற்றி நன்கு தெரியும்.

**10 வயது** : என் தந்தைக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரியாது.

**12 வயது** : என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

**14 வயது** : அவரா? அவருக்குக் காலம் மாறியது எங்கே புரிகிறது ?

**21 வயது** : கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா ?

**35 வயது** : ஏதோ கொஞ்சம் தெரியும்.

**40 வயது** : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லையே.

**45 வயது** : அவரின் யோசனையைக் கேட்டு பின் முடிவு எடுக்கலாமே.

**50 வயது** : என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா?

**55 வயது** : அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்டமாக இருக்கிறது.

அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்.

**60 வயது** : அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே....?

* * *

### தெளிவு

“நம் தந்தை சொன்னதெல்லாம் சரிதான்“ என்று நாம் உணரும் காலத்தில் “நீ சொல்வதெல்லாம் தவறு” என்று சொல்ல நமக்கொரு மகள் பிறந்து விடுகிறாள் !

* * *

# 22. அப்பா இன்று இல்லையே!

எப்படி எப்படி எல்லாமோ தன் பாசம் உணர்த்துவாள் அம்மா ஒரேயொரு கை அழுத்தத்தில் எல்லாமே உணர்த்துவார் அப்பா....

முன்னால் சொன்னதில்லை. பிறர் சொல்லித்தான் கேட்டிருக்கிறேன் என்னைப் பற்றி பெருமையாக அப்பா பேசிக் கொண்டிருந்ததை.

அம்மா எத்தனை முறை திட்டினாலும் உறைத்ததில்லை, உடனே உறைத்திருக்கிறது என்றேனும் அப்பா முகம் வாடும் போது.

உன் அப்பா எவ்வளவு உற்சாகமாக இருக்கிறார் தெரியுமா என என் நண்பர்கள் என்னிடமே சொல்லும் போதுதான் எனக்குத் தெரிந்தது எத்தனை பேருக்குக் கிடைக்காத தந்தை எனக்கு மட்டும் என....

கேட்ட உடனே கொடுப்பதற்கு முடியாததால் தான் அப்பாவை அனுப்பி இருக்கிறாரோ கடவுள்....?

சிறுவயதில் என் கைப்பிடித்து நடைபயில சொல்லிக்கொடுத்த அப்பா, என் கரம் பிடித்து நடந்தபோது என்ன நினைத்திருப்பார்...?

லேசாக என் கால் தடுமாறினாலும் பதறும் அப்பா, இன்று நான் தடுமாறியபோது பதறாமல் இருக்கிறாரே மீளா துயிலில்....

அம்மா செல்லமா? அப்பா செல்லமா? என கேட்டபோதெல்லாம் பெருமையாகச் சொல்லி இருக்கிறேன் அம்மா செல்லமான அப்பா செல்லம் என, இன்று அப்பா சென்ற பின்னர் நான் யார் செல்லம்...?

எத்தனையோ பேர் "நான் இருக்கிறேன்" எனச் சொன்னாலும் அப்பாவை போல் யார் இருக்க முடியும்...?

சொல்லிக் கொடுத்ததில்லை, திட்டியதும் இல்லை, இல்லை என்றும் சொன்னது மில்லை, வேண்டாம் எனக் கூறியதும் இல்லை, இருந்தும் ஏதோ ஒன்றினால் கட்டுப்படுத்தியது அப்பாவின் அன்பு.

நானும் காட்டியதில்லை அவரும் காட்டியதில்லை எங்கள் பாசத்தை.... இருந்தும் காட்டிக் கொடுத்த கண்ணீரைத் துடைக்க இன்று அப்பா இல்லையே!

அம்மாவிடம் உன்னுடைய பாசத்தையும் அப்பாவிடம் நேசத்தையும் இன்றே உணர்த்துங்கள். நாளை என்பது வராமலும் போகலாம்....

* * *

# 23. அப்பா, அடுத்த பிறவியிலும் உனது மகளாகவே பிறக்க வேண்டும் !

வெளியூருக்கு பரபரப்பாகக் கிளம்பிக் கொண்டிருந்தார் அப்பா. மிகச் சின்ன விஷயத்திற்காக என்னை அடித்துவிட்டார். அடியினால் ஏற்பட்ட உடல் வலியை விட, அப்பா அடிக்கலாமா என்கிற மனவலி அப்போது அதிகம்...அழக்கூடாது என்கிற வைராக்கியத்தில் கண்ணில் தளும்பிய கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். ஊருக்குப் போய்க் கொண்டிருக்கும்போதே ரயிலில் ஒரு கவிதை எழுதி அப்பா அனுப்பியிருந்தார்...என் வாழ்வில் அது ஒரு பொக்கிஷம்.

அன்பு மகளே! அருமைப் பொருளே!
அன்றொரு மாலை அப்பா அடித்தேன்
இன்று வரையில் இதயம் வலிக்க
என்னை நானே கூண்டில் அடைத்தேன்.
குட்டித் தொலைத்தேன் கோபம் பொங்கிட
கொட்டிட அருவி எட்டிப் பார்த்தது.
கெட்டிக்காரி கண்ணில் அடைத்தாய்
முட்டாள்தனத்தை உடனே உணர்ந்தேன்
ஒற்றை மனிதன் உலகம் முழுவதும்
சுற்றி வருகிறேன் உதவியே இன்றி
பலர் பலர் செய்யும் வேலைகள் யாவும்
ஒருவனே செய்யும் ஓயா உழைப்பு
பயணம் செய்தல் பணத்தை ஈட்டல்
படித்தல் எழுதுதல் பேச்சில் சிறத்தல்
என்று பல் எண்ணமே தின்கிறபடியால்
களைத்துப் போனேன் ஒவ்வொரு நாளும்
இத்தனை அழுத்தம் இருக்குமானால்
புத்தரும்கூட போரில் குதிப்பான்
அத்தகு நிலையில் அன்று நடந்தது
இத்தகு தவறு இனிமேல் இல்லை
மலரின் தலைமேல் நெருப்பை வைக்கும்
நிலைமைகள் இனிமேல் நிச்சயம் இல்லை
அன்னை சக்தி அருள்வாய் மகளே
கண்ணைத் துடைத்திடு காரியம் செய்திடு!

என்கிற அப்பா கவிதையை, அடித்த அன்று அழாத நான் படித்த அன்று கதறி அழுதேன்.

சின்ன வயதில் எனக்கொரு ஏக்கம் உண்டு. சினிமாவிலும் சிறு கவிதையிலும் வருகிற மாதிரி அப்பா பாசமழை பொழியவில்லையே என்று வருத்தப்படுவேன். வருத்தம் தாண்டி கோபமேகூட உண்டு. அப்பா....பட்டும் படாமலும்தான் பாசம் காட்டுவார். இதற்கு அப்பா சொன்ன காரணத்தை என்னால் மறக்க முடியவில்லை.
“திருமதி. இந்திராகாந்தி கடைசி வரை நேருவின் மகளாகவே உணரப்பட்டார். ஒருபோதும் ஃபெரோஸ் காந்தியின் மனைவியாக ஒளிவீசவில்லை. அளவுக்கு மீறி அப்பாவின் ஆளுமைக்குள் மகள் வந்துவிட்டால், அவளது குடும்ப வாழ்வு வீணாகிவிடும்...புரிந்துகொள் ! “ என்று அப்பாவிடமிருந்து கறாராகப் பதில் வந்தது. இது மிகவும் யோசிக்க வேண்டிய விஷயம்.

அதேபோல் என்னைவிட என் தங்கைமீது அப்பா அதிக பாசம் காட்டுவது போல அப்போது எனக்குத் தோன்றும். என்னை அதிகம் கண்டித்து வளர்த்ததாக ஒரு நினைப்பு. என் மனம் கனத்தபோது, உனக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தால் மட்டுமே இதன் விளக்கம் புரியும் என்று அப்பா பதில் சொன்னார். அதோடு, மகளே...நீ மட்டும் வளரவில்லை, அப்பாவும் வளர்கிறேன், உன்னை வளர்க்கும் முறையில் சில உன்னை பாதிக்கும்போது நானும் உஷாராகிவிடுகிறேன் ஓஹோ..நாம் இப்படிச் செய்திருக்கக் கூடாது என்று என்னை மாற்றிக் கொள்கிறேன். உன் விஷயத்தில் நடந்த தவறுகள் எல்லாம் அவள் விஷயத்தில்

சரி செய்யப்படுகிறது. உங்கள் இருவர் மீதும் அன்பு சமம் என்றாலும், வளர்ப்புமுறை மாறத்தான் செய்யும்! என்பார். பிள்ளை மட்டும் வளர்வதில்லை. பெற்றோரும் வளர்கிறோம் என்ற வரிகள் அப்பாவின் அனுபவப் பிழிவு.

எக்காரணத்தை முன்னிட்டும் (தங்க) நகைகள் கடன் வாங்கி அணியாதே...கூடுமானவரை விலை உயர்ந்தவற்றை இரவல் கொடுக்காதே... பிறர் உடுத்திய ஆடைகளை உடுத்தாதே, உணவு வீணாகிறது என்று சாப்பிடாதே, இவர்களை எப்படி உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்று மலினமாக யோசிக்காதே...இப்படி அப்பா சொன்ன எத்தனையோ புத்திமதிகள் அந்தந்தப் பிரச்னைகளின்போது நினைவில் மின்னிக் கொண்டே இருக்கும்.

பெண் பிள்ளைகள் தங்கள் திறமைக்கேற்ப நிறைய படிக்க வேண்டும். வேலைக்குப் போகிறார்களோ இல்லையோ, உயர் கல்வி படிக்க பெண் பிள்ளைகள் முன்வர வேண்டும். பொருளாதாரம் குடும்ப அவசியத்திற்கேற்ப வேலை பார்க்க முயற்சிக்க வேண்டும். சிறுகதை, நாவல் இவை தாண்டி கட்டுரைகள்... கனத்த விஷயங்கள் கவனமாகக் கற்க வேண்டும். சுறுசுறுப்பாகப் பணியாற்றவும், அன்பை முதன்மை அளவுகோலாக வைத்துக் குடும்பம் நடத்தவும் பெண் மக்கள் முடிவு செய்ய வேண்டும். நடிகைகளை முன்னுதாரணங்களாக நினையாமல் வளர வேண்டும். உடைவிஷயத்தில் கண்ணியம் என்பதே அளவுகோல்.

ஒரு காலத்திலும் கணவனிடம் அப்பாவை உயர்த்திப் பேசக்கூடாது. அப்பாவுடன் மறந்தும் கணவரை ஒப்பிட்டுப் பார்க்கும் முட்டாள்தனத்தை விட்டுவிட வேண்டும். அப்பாவை நம்பி வாழும் வாழ்க்கை அசட்டுத்தனம்... மாறாகச் சொந்தக்காலில், சுயம் அழியாது மகள் வாழ வேண்டும். புகுந்த வீட்டில் தனக்கு ஏற்படும் சிறு சிறு பிணக்குகளைக்கூட, தாய் வீட்டில் தகவல் ஒலிபரப்பு செய்வது முட்டாள்தனத்தின் உச்சக்கட்டம்.

ஒரு பெண்ணுக்கு தாய், தந்தையைவிட, கணவன், மாமனார், மாமியார், குழந்தைகள் என்கிற புரிதல் அவசியம். குழந்தைகள் வளர வளர குடும்ப வளையம் என்கிற பூ விலங்கை கொஞ்சம் கொஞ்சமாகக் கழற்றிவிட்டு பிறர் நலப் பணிகள், சமூக அக்கறை உள்ள பொதுப்பணிகள் என்கிற பொன் விலங்கை மாட்டிக் கொள்ள பெண்கள் முன்வர வேண்டும்.

அப்பப்பா....இப்படி ஒன்றல்ல.... இரண்டல்ல.. வான் மழையாய்ப் பெய்த வாழ்வாதார மழையல்லவா அப்பாவின் அறிவுரைகள்!

அப்பா...நீ வேண்டுமானால் அடுத்த பிறவி வேண்டாம் என்கிற ஞானஸ்தனாக இருக்கலாம். ஆனால் அடுத்த பிறவியிலும் உன் மகளாகவே பிறக்க விரும்பும் அஞ்ஞானியாக இருப்பதில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?!

(அந்த அப்பாவின் பெயர் சுகி.சிவம்)

மல்லிகை மாத இதழ்
மார்ச் 2016

* * *

# 24. அன்பு உள்ள இடத்தில் தான் நம்பிக்கை இருக்கும்

ஒரு தந்தையும் மகளும் ஆற்றின் பாலத்தை கடக்க முயல்கின்றனர். தந்தை சொன்னார் : "என் கையை கெட்டியாகப் பிடித்துக் கொள். ஆற்றில் தண்ணீர் நிறையப் போகிறது. பத்திரம்." என்று.

உடனே மகள் சொன்னாள். "அப்படியென்றால் நீங்கள் என் கையை பிடித்துக் கொள்ளுங்கள் அப்பா."

தந்தை கேட்டார் : "இரண்டுக்கும் என்னம்மா வித்தியாசம்?"

மகள் சொன்னாள் : "நான் உங்கள் கையை பிடித்தால், ஏதேனும் தவறு நடந்தால் கையை விட்டுப் பிரிய வாய்ப்பிருக்கிறது. ஆனால், நீங்கள் பிடித்தால் எந்த காரணத்திற்காகவும் என் கையை விட மாட்டீர்கள் அப்பா."

உண்மையான அன்பு எங்கே உள்ளதோ, அளவு கடந்த நம்பிக்கையும் அங்கே...

* * *

பிள்ளைகளின் ஆசையை நிறை வேற்றுவது ஒருபுறம் இருந்தாலும், "தான் அனுபவித்த கஷ்டங்களை தனது பிள்ளைகள் ஒருபோதும் அனுபவிக்கக் கூடாது என்று நினைப்பதுதான்" அப்பாக்களின் இதயம்.

* * *

# 25. பொறுப்பு

சங்கரன், தனது மனைவி, மகன் வினோத்துடன் சென்னையிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டான்.

புறப்படும்முன் பக்கத்து வீட்டில் வசிக்கும் தனது நண்பரிடம், நான் வர ஒரு வாரம் ஆகும். அதுவரை தனது வீட்டில் உள்ள செடி கொடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும்படியும், நாய்க்கு தினமும் உணவு கொடுக்கும்படியும் கேட்டுக்கொண்டான்.

மதுரைக்கு வந்தபின்பு, செடி, கொடிகள், நாய் பற்றியும் நண்பரிடம் விசாரித்தான் சங்கரன்.

"அவர்கிட்டே பொறுப்பை ஒப்படைச்சாச்சே, அப்புறமும் அது பற்றி போன் பண்ணி கேட்கணுமா?" என்று அப்பாவிடம் கேட்டான் வினோத்.

"என்ன இருந்தாலும் நம்மகிட்டே இருக்கிற அக்கறை, பொறுப்பு அவர்கிட்டே எதிர்பார்க்க முடியுமா... அதான் நினைவூட்டினேன் " என்றார் சங்கரன்.

"அப்படின்னா முதியோர் இல்லத்துல இருக்குற நம்ம தாத்தாவையும் நம்மை மாதிரி அவங்க கவனிக்க மாட்டாங்கதானே?" என்று கேட்டான் வினோத்.

வினோத்தின் பேச்சு நெற்றிப் பொட்டில் அடிப்பதுபோல் இருந்தது. உடனே அப்பாவை முதியோர் இல்லத்திலிருந்து வீட்டிற்கு அழைத்துவர முடிவு செய்தான் சங்கரன்.

**– S. முகம்மது யூசுப்**
குமுதம் 15.12.2014

* * *

# 26. தந்தையர்களை சிறப்பிக்கும் வகையில் ஒரு அற்புதமான கவிதை

நான் அறிந்த
கட்ட பொம்மனும்
கர்ண மகாராசனும்
எல்லாமே எனக்கு
என்னுடைய அப்பாதான்
எனது எதிர்காலத்துக்கு
இன்றும்
சொல்லத் தெரிந்தது
"அப்பா போல வரணும்".
நான் அறிந்த
கணிதமும் இலக்கியமும்
அப்பாதான்.
அப்பாவின்
கடின உழைப்புக்கு
அவரது தலைப்பாகைதான்
சாட்சியம்.
அதில் உப்பு பூத்திருக்கும்
அழகைக்காணும் போதெல்லாம்
எனக்குள்தான்
எத்தினை பூரிப்பு.
எத்தினை மாற்றம்.
அம்மாவின் அடுக்களை
பண்டத்தை விடவும்
எனது நாசிக்கு அதிகம்
பழக்கப்பட்டது
அப்பாவின் வியர்வை
நாற்றம்தான்.
முகம் ஒற்றிக்கொள்ளும்
தோள் துப்பட்டாவை
தலைப்பாகையாக
உடுத்திக்கொள்ளும்போதுதான்
இருக்கிறதே மிடுக்கு.
ஏழுதலைமுறைக்கான
நிமிர்வு எனக்கு
ஆனாலும்
வாழைக்குணம் அப்பாவுக்கு.
குலை போட்டும்
குனிவாய் வாழைகள்
அப்பாவும் குனிகிறார்
நான் கனிவதற்காக.
சிறு வயதில்
அந்தக் குனிவில்
சவாரி விட்டவள் நான்
ஆனால் எனது முதுகில்
யாரும் சவாரி
விட்டுவிடக் கூடாது
என்பதற்காகத்தானே
அப்பா இத்தனைக்கும்
கஷ்டப்படுகின்றார்.
பள்ளி முடிந்தும்
வீடு திரும்பாத
என்னைத் தேடி
அம்மா தெரு ஏறுவா
நான் வயல் இறங்குவன்.
எனது கால் கழுவி
வரப்பிருத்தி விடும் அப்பா
எனது சட்டையில்
அழுக்கு சேராதிருக்க
சேறு குளிக்கிறார்
நெடுநாளும்.

அப்பா சேறு மிதித்திட்டு
வரப்புகளோடு
நடந்து வருவார்.
அதை படம்பிடிச்சு பெரிசாய்
சுவரில மாட்டோனும் என்று
எனக்குள் நெடுநாளும்
ரொம்பவே ஆசை.
நிறைவேறவே இல்ல
கடுதாசியை எடுத்து வரைஞ்சும்
திருப்தி காணாத நான்
கண்ணாடி முன்னே
அதிக நேரத்தை
செலவழிச்சிருவன்
வேசமிட்டு அப்பாபோல
மீசை வைச்சு
அழிச்சு அழிச்சு
நேர்த்தி வரும் வரைக்கும்
ஆனால் அப்பாபோல
சுருட்டிமுப்பு ஒத்திகை பார்த்து
அவர் ஒத்தடம் கொடுத்த வடுக்கள்
இப்பவும்
எனது நடத்தையை
ஒழுங்காற்றிக் கொண்டிருக்கும்
அப்பாவின் இன்னுமொரு முகம்.
அப்பாவுக்கு
மூத்தபிள்ளை நான்தான்
ஆனாலும் தலைப்பிள்ளை
வயல்தான்.
அம்மாவை விடவும்
அவருக்கு நல்ல துணை
மயிலையும் சிவலையும்
அப்பா அதிகம் நேசிப்பது
அவைகளைத்தான்.
அவரது
சொத்துச்சுகம் எல்லாமே

அந்த திண்ணை வீடும்
கொல்லைப்புறமும்தான்.
அப்பா கைகளை
தலையணையாகக் கொண்டு
(இ) ராஜ தூக்கம் போடும்
அந்த மாமர நிழலுக்கு
மட்டும்தான் அப்பாவின்
கனவுகளின் கனதி புரியும்
அந்த தென்னைகளுக்குத்தான்
எத்தினை வயசு
அதன் கீழிருந்து அப்பா
அண்ணாந்து விடும்
பெரு மூச்சில்தான்
அவற்றின் மூப்பை
அளவிட முடியும்.
அப்பாவுக்கு ஆயுசு கெட்டி
பழஞ்சோற்றுல பசி போக்கிறதும்
மோரில தாகம் தணிக்கிறதும்தான்
அவரது உடல் தெம்பு.
ஆங்கே வீழ்ந்து கிடக்கும் மரங்களை
குற்றிகளாக வீடு சேர்க்கும்போது
நான்
அப்பாவின் உடல்
திரட்சிகளை
கணக்கெடுத்தவாறல்லவா
பின் தொடர்ந்திருக்கிறேன்.
எனக்கு
“புதியதொரு உலகை”
காட்டியது அப்பாதான்
வயலில் இறங்கி
நடக்க ஆரம்பிச்சிட்டா
அவர் பின்னே
எனது விடுப்பு கேள்விகள் போகும்.
நாட்டு நடப்புகள் அத்தினையும்
அப்பாவுக்கு அத்துப்படி.

ஆர்வமிகுதியால்
விடுமுறை நாள்களில் கூட
கட்டுச்சோற்றோடு வயலுக்கு
ஓடு்டுவன்.
அப்பா வயலில நிற்கிற
ஒவ்வொரு நிமிசமும் கூடக்கூட
வயல் காட்சி மீது பிடிப்பும்
அதிகரிச்சுக்கொண்டே போகும்.
பொழுது சாய்கிற
நாழிகை மீதுதான்
கோபம் அதிகமாக வரும்.
பலம் கொண்டவரை
நிலத்தை உதைப்பன்
வலிக்கு அப்பா மருந்திடுவார்
(இ) ராத்திரி பூராவும்
எனது சுகமான தூக்கம்
அப்பாவின் நெஞ்சில்
அவரது நெஞ்சு மயிர் பிடித்து
பழகிப்போன
இந்தக் கைகளுக்குள்
எழுது கருவியை திணித்தது
என்னவோ அப்பாதான்.
ஆனாலும் அந்த
மண்வெட்டி பிடித்த
கைகளைப்பற்றி
எழுதும்போதுதானே
எந்த எழுதுகருவி
பிடிக்கும் கைக்கும்
பெருமை சேர்(க்)கிறது.

* * *

## முன் உதாரணம்

கண்காட்சிக்கு நல்ல கூட்டம். நுழைவு சீட்டுக்கான வரிசையில் தன் குட்டி மகளுடன் நின்று கொண்டு இருந்தார் அவர். பக்கத்தில் நின்றவர் பேச்சு கொடுத்தார். "பொண்ணு அழகா இருக்காளே என்ன படிக்கிறா" என கேட்டார். "ஒண்ணாகிளாஸ் போறா" என்றார் அவர்.

"அட பார்க்குறதுக்கு குட்டியூண்டா நாலு வயது பொண்ணு மாதிரி இருக்கா ஒண்ணாங் கிளாஸ் போறாளா"! என வியந்தார் அவர்.

டிக்கட் கவுண்டரை நெருங்கி விட்டார்கள்.

"டிக்கட் எவ்வளவுப்பா?"

"பெரியவங்களுக்கு 200 ரூபாய் சார். அஞ்சு வயசு முதல் பத்து வயசு வரை 100 ரூபாய். அஞ்சு வயசுக்கு குறைவுனா ஃப்ரீ."

சரி 200 ரூபா டிக்கட் ஒண்ணு, 100 ரூபா டிக்கட் ஒண்ணு என கேட்டு வாங்கினார் அவர்.

உள்ளே போனதும் பக்கத்தில் நின்றவர் கேட்டார். "சார் பொண்ணுக்கு நாலு வயசுனு சொல்லி இருந்தா, நூறு ரூபா மிச்சம் ஆகி இருக்குமே. அஞ்சு வயசுன்னு டிக்கட் தருபவருக்கு தெரியவா போகுது"?

"அவருக்கு தெரியாது, ஆனா என் பொண்ணுக்கு தெரியுமே."

* * *

# 27. அப்பாக்கள்...

ஒரு தந்தையாவது மிகவும் இலகுவானது. ஆனால், ஒரு தந்தையாக இருப்பது மிகவும் கடினமானது.

*அப்பா...*

ஒரு மனிதன், பின்னாளில் தனக்கு சொந்தமாக்கி வைத்திருக்கிற துணிச்சலும், திடமும் அப்பா என்கிற அடிவேரிலிருந்து கிடைத்ததுதான். ஒரு குழந்தையின் நடத்தை, பழக்க வழக்கம், பண்பு எல்லாவற்றுக்கும் முன்னுதாரணமான வழிகாட்டி தந்தையே.

கடவுள் மனித உயிர்களுக்கு அளித்த மிகப்பெரிய வெகுமதி தந்தை. ஒரு நல்ல தந்தை ஆயிரம் ஆசிரியர்களுக்கு சமமாக இருப்பார். எப்போதும் எங்களோடு கூட இருந்து வழிகாட்டுகிற இந்த அகல்விளக்கின் தியாகம் அளப்பரியது.

தன் குழந்தையை வளர்த்து ஆளாக்க பொருளாதார ரீதியாக தந்தைமார் சுமக்கிற சுமைகள் அதிகமானவை. அதற்காக அவர்கள் படுகிற பாடுகள் வலிமிகுந்தவை.

ஒரு நல்ல தகப்பனுக்கு தன் குழந்தைகளின் வளர்ச்சி மீது இருக்கிற அக்கறையிலும், அங்கலாய்ப்பிலும் இருக்கும் தீவிரம் வேறெந்த உறவுகளிடமும் இருக்காது. தம் குழந்தைகளின் எதிர்காலம் பற்றியே சதா சிந்திக்கும் அப்பாக்கள், அவர்களுக்காகவே தம் வாழ்க்கை முழுவதையும் தியாகம் செய்து விடுகின்றனர்.

அம்மா என்றால் அன்பு என்கின்றோம். ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளாத அப்பாக்களின் அன்பும் மிகுந்த ஆழமானதுதான். அவர்களின் பாசமும் ஈரமானதுதான்.

தம் பிள்ளைகளை நல்வழிப்படுத்தி கூட்டிச் செல்வதற்கு அவர்களுக்கு கண்டிப்பு அவசியமாகிறது. அதனாலென்னவோ, பல அப்பாக்கள் தம் பிள்ளைகள் மீது கொண்டிருக்கிற தாய்க்கு நிகரான நேசத்தை வெளிக்காட்டாமல் மிகவும் இரகசியமாகவே வைத்திருக்கிறார்கள்.

தந்தை என்கிற சூரியனின் வெளிச்சம் நன்றாக கிடைத்துவிட்டால் பிள்ளைத் தாவரங்கள் இயல்பாகவே செழித்து வளர்ந்து விடும்.

வாழ்வின் அனுபவப் பாடங்கள் அனைத்திலும் மிகச் சிறந்த ஆசானாக ஒவ்வொரு இளைஞனுக்கும் யுவதிக்கும் அவரவர் அப்பாக்களே இருக்கிறார்கள்.

நாம் வாழும் சமூகத்திற்கு ஒரு நல்ல மனிதன் கிடைத்திருக்கிறான் என்றால் அவனுக்கு பின்னால் ஒரு பொறுப்புமிக்க தந்தையின் கடும் உழைப்பும் தியாகமும் இருந்திருக்கிற தென்றே அர்த்தம்.

யானையின் பலம் தும்பிக்கையிலே என்பது எவ்வளவு தூரம் உண்மையானதோ அதைவிட உண்மையானது ஒரு மனிதனின் பலம் நம்பிக்கையிலே என்பது ஒவ்வொரு மனித மனசுக்குள்ளும் ஓடிக் கொண்டிருக்கும் அந்த நம்பிக்கை நதியின் நதிமூலம் அவரவர் அப்பாக்களே!

ஒரு குழந்தை அப்பாவின் கைப்பிடித்துக் கொண்டு எடுத்து வைக்கிற முதல் அடியே நம்பிக்கை விதையின் பதியமிடல் நிகழ்வு.

விழவும், எழவும் வலிகளையும், வடுக்களையும் தாங்கிக் கொண்டு நடக்கவும் ஒரு அப்பாவிடமிருந்து குழந்தை பெறுகிற பயிற்சி அவசியமானது.

இருகைகள் தட்டி எழும் ஓசை போல அம்மா அப்பா என்கிற இரு உறவுகளின் ஆரோக்கியமான இணைப்பும் பிணைப்பும் இல்லாமல் ஒரு நல்ல மனிதனை இந்த சமூகம் பெற முடியாது.

ஒரு தாய் தன் குழந்தை தன்னுடனேயே இருக்க வேண்டுமென்கிற அன்பின் உச்சத்தில் அதனை இடுப்பில் கெட்டியாக சுமக்கிறாள். தந்தையோ தன் குழந்தை தன்னைவிட உயர்ந்த நிலைக்கு சென்றுவிட வேண்டுமென்ற துடிப்போடு தன் தோள்களில் தூக்கி சுமக்கிறார்.

ஒவ்வொரு அப்பாக்களும் பிள்ளைகளுக்காக, அவர்களுக்கு கடைசிவரை தெரியாமலேயே இருந்துவிடுகிற எத்தனை துயரங்களை, அவமானங்களைச் சந்தித்திருப்பார்கள்?

பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக எத்தனை பேரிடம் உதவி கேட்டு நடந்திருப்பார்கள்? எத்தனை பேரிடம் கடன் வாங்கியிருப்பார்கள்? அதை கட்டி முடிக்க எவ்வளவு போராடியிருப்பார்கள்? எத்தனை இரவுகள் தூங்காது இருந்திருப்பார்கள்? எத்தனை பாரங்களை மனசில் சுமந்திருப்பார்கள்?

தன் பிள்ளைகள் தான் படும் துயரம் கண்டு வருந்திவிடக் கூடாதென்று அவர்களுக்கு முன்னால் தம் வலிகளை எப்படி மறைத்திருப்பார்கள் ? ஆசைப்பட்டு பிள்ளைகள் கேட்கிற பொருட்களுக்காக எத்தனை மணி நேரங்கள் கூடுதலாக தம் வியர்வை சிந்தியிருப்பார்கள்?

மனைவி, பிள்ளைகளை ஏற்றிய குடும்ப வண்டியை இழுத்துச் செல்வதற்காக அப்பா என்கிற தியாகப் படைப்பு தன்னுடலை எவ்வளவு தூரம் வருத்தியிருக்கக் கூடும்?

பிள்ளைகள் தூக்கத்திலிருக்கும் போது அவர்களின் தூக்கம் கலையாமல் முத்தமிட்டுக் கொண்டு போர்த்தி விட்டு வேலைக்குப் போகிற அப்பாக்கள். எத்தனைமுறை மௌனமாக அழுதிருக்கும் அவர்கள் இதயங்கள்?

இதற்கும் மேலாய் உழைப்புக்காகவே கடல் கடந்து சென்று கரைந்துபோகும் அப்பாக்களின் அவல வாழ்க்கையை அவர்களால் எப்படி ஏற்றுக்கொள்ள முடிகிறது? வேலை இடைவெளிகளில் பிள்ளைகளின் குரல் கேட்டு உற்சாகம் ஏற்றிக்கொள்கிற அவர்களின் உழைப்பின் பின்னாலிருக்கிற உளைச்சலை எப்படி புரியவைப்பது?

படுக்கையறை கட்டிலின் தலைப்பகுதியில் தன் மனைவி பிள்ளைகளின் புகைப்படத்தை ஒட்டி வைத்துக்கொண்டு சதா வலி சுமந்து வலி சுமந்து வாழ்க்கையை சுமந்து செல்கிற இந்த அப்பாமாரின் வாழ்க்கை எத்தனை கொடுமையானது?

வீரம், துணிச்சல், விடாமுயற்சி, நம்பிக்கை, உழைப்பு... இவைகள் ஒரு நல்ல அப்பாவிடமிருந்து இளைஞன், யுவதிகளுக்கு இயல்பாகவே கிடைத்து விடுகிற பெரிய வெகுமதிகள்.

ஒரு இளைஞனோ, யுவதியோ வளர்ந்து பெரியவனான பிறகும், குழந்தைகளுக்கு பெற்றோரான பிறகும் அவர்களின் தந்தை தன் பிள்ளைகளை சிறு பிள்ளைகளாகவே பார்க்கிறார். பிள்ளைகளுக்கும் அப்பாவின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள், அனுபவப்பாடங்கள் என எல்லாம் எப்போதும் தேவைப்படுகின்றன.

“எதுக்கும் பயப்படாதே” “ஒன்றுக்கும் யோசிக்காதே” “எல்லாம் வெல்லலாம்” “மனசை தளரவிடாதே” நான் இருக்கிறேன்

இவையெல்லாம் அப்பாக்கள் தம் பிள்ளைகளின் செவிகளுக்குள் கடைசி வரைக்கும் திரும்பத்திரும்ப சொல்லிக் கொள்கிற நம்பிக்கை தரும் ஒற்றைக் கட்டளைகள். அவர்கள் வாய்களிலிருந்து பிள்ளைகளின் மனங்களுக்கு கடத்தப்படுகிற இந்த வார்த்தைகளின் வீரியம் வலிமை யானது.

தன் இயலாமையை தான் உணர்கிற ஒரு காலத்திலும் தந்தைமார் இந்த உற்சாகம் நிறைக்கிற வார்த்தைகளை சொல்ல மறப்பதேயில்லை. அவர்களுக்கு நன்றாகவே தெரியும் தம் பிள்ளைக்கு தமது குரலொன்றே போதுமென்பது.

**என்னை எவ்வளவு தூரம் வீசினாலும் பயமில்லை ஏனென்றால் கீழே நிற்பவர் என் “அப்பா”**



அப்பாக்கள்..

* ***பிள்ளைகளின் சுமைதாங்கிகள்***
* ***பிள்ளைகளின் நெம்புகோல்கள்***
* ***பிள்ளைகளின் அச்சாணிகள்***
* ***பிள்ளைகளின் சூரியன்கள்***
* ***பிள்ளைகளின் திசைகாட்டிகள்***
* ***பிள்ளைகளின் ஆசிரியர்கள்***
* ***பிள்ளைகளின் நம்பிக்கைகள்***

அப்பா :

* ***தூய்மையான அன்பு***
* ***போலியற்ற அக்கறை***
* ***நேர்மையான வழிகாட்டல்***
* ***நியாயமான சிந்தனை***
* ***நேசிக்கத்தக்க உபசரிப்பு***
* ***மாறுதலில்லா நம்பிக்கை***
* ***காயங்களற்ற வார்த்தை***
* ***கம்பீரமான அறிவுரை***
* ***களங்கமில்லாத சிரிப்பு***
* ***உண்மையான அழுகை***

என அத்தனையும் உளமகிழ்ந்து செய்து வளர்த்தவர்.

தோழனுக்கு தோழனாய் தோள் கொடுப்பவர் அப்பா

அப்படியொரு அப்பாவாக இருப்பதில் ஒவ்வொரு தகுதியுள்ள அப்பாக்களும் மகிழ்ச்சியுறுவர். இதுவரை இல்லாவிடிலும் இனியாவது இப்படிப்பட்ட அப்பாவாக இருக்க இப்போதிருந்தே தன்னை மாற்றிக்கொள்ள ஆரம்பிப்பர்.

* * *

# 28. அப்பாவின் கண்கள்

ராத்திரி எல்லாம் அப்பாவோடுதான் இருந்தான் சங்கரன். பொட்டு தூக்கம்கூட இல்லை. அப்பா, இருமிக்கொண்டே இருந்தார். சங்கரனின் கை விரல்களைப் பிடித்து நகத்தைத் தடவியவாறே ஓரக்கண்ணால் பார்த்தார். 'நகத்தை வெட்டுடா சங்கரா...!' படிக்கிற பையன் மாதிரியா இருக்க? என அப்பா சொல்லும் வழக்கமான வசவு, சங்கரனின் காதுகளில் ஒலித்தது.

நிரம்பியிருந்த மூத்திரப் பையை எடுத்துச் சென்று பாத்ரூமில் ஊற்றினான். திரும்பி வரும்போது நைட் டியூட்டி நர்ஸ், டேபிளின் மீது இருந்த காகிதத்தில் எதையோ எழுதிக் கொண்டிருந்தார். அவரிடம் அப்பாவின் ஆரோக்கியம் பற்றி ஏதாவது கேட்கலாம் என நினைத்து அருகில் சென்றான். தலையைத் தூக்கி அவனைப் பார்த்தார். 'எல்லாமே முடிந்துபோய் விட்டது. அப்புறம் என்ன சொல்வது?' என்பதுபோன்று இருந்தது அவருடைய பார்வை. அதற்கு மேல் சங்கரன் அங்கு நிற்கவில்லை.

அந்த அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த ஒவ்வொரு வருக்கும் ஒரு வியாதி. ஒருவரின் மூக்கில் செயற்கை சுவாசம் ஏறிக் கொண்டிருந்தது. இன்னொருவரின் நெஞ்சுப் பகுதியில் 10, 15 ஒயர்களுடன் பக்கத்தில் ஒரு மெஷின் வைத்திருந்தார்கள். மற்றொருவர் தூக்கத்தில் முனகிக்கொண்டு இருந்தார். அந்த அறையில் தூங்கமுடியாமல் துடித்துக் கொண்டிருந்தது சங்கரனின் அப்பா மட்டுமே. அவருக்காக அவனும் விழித்திருந்தான்.

தலைக்கு மேல் ஓடிய மின்விசிறியை அடிக்கடி பார்த்தார் அப்பா. அவரது நெஞ்சை கைகளால் நீவிவிட்டவன், அவரது வலது கண்ணோரம் நீர் வழிவதைக் கவனித்தான். அதைப் பார்த்ததும் சங்கரனின் கண்களும் கலங்கின. அவரைக் கொஞ்சம் நெருங்கினான். கட்டிலில் உட்கார்ந்து அவருடைய தலையை நீவி, கண்களைத் துடைத்தான்.

"சிறுநீரகங்கள் இரண்டும் பழுதாகிவிட்டன. எந்தவித மாற்று சிகிச்சையும் பலன் அளிக்காது" என்று டாக்டர் சொல்லி, இரண்டு மாதங்கள் ஆகின்றன. வயதின் காரணமாக எந்தவித மருத்துவ சிகிச்சையும் செய்யமுடியாத சூழல். நீரிழவு நோய் கடுமையாகவே தாக்கியிருந்தது. தினந்தோறும் இன்சுலின்கள், மருந்து மாத்திரைகள் என இரண்டு மாதங்களாக இதே மருத்துவமனையில், இதே படுக்கையில் சங்கரனின் அப்பா.

"உனக்கு ஒண்ணும் இல்லப்பா...நாளைக்கு வீட்டுக்குப் போயிடலாம்" என்று அவர் காதுகளில் நா தழுதழுக்கச் சொன்னான். மீண்டும் அவரது கண்களில் நீர் வழிந்தது. அவரது கைகளை இறுகப் பற்றி கண்களைத் துடைத்துவிட்டான்.

பொழுது விடிந்தது. சங்கரனின் கண்களில் ஒரே எரிச்சல். இரவு முழுவதும் தூங்காமல் இருந்ததால் கண்கள் சிவந்திருந்தன. அண்ணன், வீட்டில் இருந்து மருத்துவமனைக்கு வந்தார். "என்னாச்சு.... டாக்டர் ஏதாவது சொன்னாரா?" என்று

கேட்டார். ‘எதுவும் சொல்லவில்லை’ என்பது போல உதட்டைப் பிதுக்கினான் சங்கரன். அப்பா இன்னமும் தூங்கவில்லை. தண்ணீர் தொட்டு அப்பாவின் கை கால்களைத் துடைத்தான். அப்பாவின் சூடு, அவன் கைகளில் ஏறியது. அப்பாவின் முகத்தைத் துடைத்து கண்களை ஈரமான பஞ்சுகொண்டு ஒத்தி எடுத்தான்.

“சரி நீ போயிட்டு வா. நான் பார்த்துக்கிறேன்” என்று அண்ணன் சொன்னார்.

சங்கரன், அரைகுறை மனதுடன் கிளம்ப முடிவு செய்தான். அப்போது, அவன் கையைப் பிடித்து அப்பா இழுப்பதுபோன்ற ஓர் உணர்வு. கையை விடுவித்து அப்பாவைப் பார்த்தான். அவரது கண்கள் அவனையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தன. “போகாதே...” என்று சொல்வதாக அவனுக்குப்பட்டது. இருந்தாலும் அவன் கண்கள் ஓய்வை விரும்பின. கண் எரிச்சல் தாங்க முடியாமல் மருத்துவ மனையில் இருந்து வெளியேறி வீட்டுக்கு வந்தான்.

யாரிடமும் பேசாமல் படுக்கையில் படுத்த சிறிது நேரத்தில், அண்ணனிடமிருந்து அழைப்பு வந்தது. “துக்கம் தொண்டையை அடைக்கும்” என்பார்களே.. சங்கரன் அதை உணர்ந்தான்... அப்பாவின் மரணச் செய்தியைக் கேட்டபோது !

மருத்துவமனைக்குள் நுழைந்ததும், அண்ணன்கள் இருவரும் அவனைப் பார்த்து ‘ஓ..’வென அழத் தொடங்கினர். அப்பாவின் அருகில் சென்றான். அவர் கண் மூடித் தூங்குவது போலவே இருந்தது. வலது கண்ணின் ஓரத்தில் நீர் காய்ந்திருந்தது. அவரை ஸ்ட்ரெச்சரில் கிடத்தி ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள்.

அப்பாவின் உடல் வீட்டுக்கு வந்தது. ஊர்ஜனம் எல்லாம் கூடியிருந்தனர். ஆம்புலன்ஸ் வீட்டின் வாசலில் நின்றதும் எல்லோரும் கூடிக் கொண்டார்கள். “எங்க அய்யா....சாமி...” என்றெல்லாம் ஒப்பாரிக் குரல்கள். கேட்கக் கேட்க சங்கரனின் கண்களில் இருந்து சாரை சாரையாக நீர் வந்துகொண்டே இருந்தது.

நடுவீட்டில் அப்பாவின் உடல். முக்கிய பிரமுகர்கள், ஊர்ப் பஞ்சாயத்தார்கள் எல்லாம் சங்கரனின் அண்ணனைச் சுற்றி ஏதோ கேட்டுக் கொண்டிருந்தனர். வாழைமரங்கள் வந்து இறங்கின. பெரிய அண்ணனின் நண்பர், அண்ணனிடம் ஏதோ ஒரு காகிதத்தைக் காண்பித்துப் பேசிக் கொண்டிருந்தார். பிறகு இருவரும் சங்கரனை நோக்கி வந்தனர்.

“அப்பா, கண் தானம் பண்ணியிருக்காராம்” என்று அண்ணன் மெல்லிய குரலில் சொன்னார். ஆமா சங்கரா... 10வருஷத்துக்கு முன்னாடியே அப்பா கண் தானம் பண்ணிட்டார். எங்க ரோட்டரி கிளப்புக்கு உறுதிமொழி கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கார்...பாரு என்று சொல்லி அந்தக் காகிதத்தை அண்ணனின் நண்பர் அவனிடம் தந்தார். அவன் அதில் அப்பாவின் அழகான கையொப்பத்தை மட்டும்தான் பார்த்தான். “நீ சொன்னா இப்பவே கண் ஆஸ்பத்திரிக்கு சொல்லி ஆம்புலன்ஸையும், டாக்டரையும் வரச் சொல்றேன். ரெண்டு நிமிஷம்தான் ஆகும்” என்று சங்கரனின் பதிலுக்காகக் காத்திருந்தனர். “அப்பாவின் ஆசைப்படியே செய்யுங்கண்ணே” என்று சொல்லிக் கலங்கினான் சங்கரன்.

அரை மணி நேரத்துக்குள்ளாக ஒரு டாக்டர் மற்றும் இரண்டு செவிலிகள் ஆம்புலன்ஸில்

வந்து இறங்கினர். நர்ஸ் ஒருவரின் கையில் சிறு கண்ணாடி டம்ளர், சிறிய பெட்டி ஆகியவை இருந்தன. மூவரும் வீட்டினுள் நுழைந்தனர். அம்மாவுக்கு விஷயம் தெரிந்ததும் 'ஓ'வென்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டார். சமாதானப்படுத்தி வெளியே அழைத்து வந்தார்கள். அப்பாவின் உடலை யாரும் பார்க்காதவாறு இரண்டு பேர் சுற்றி நின்று வெள்ளைத் துணியை வைத்து மறைப்பு ஏற்படுத்தினர். டாக்டர், தனது வேலையைத் தொடங்கினார்.

அப்பா கோபப்படும்போது அவருடைய கண்களைப் பார்க்க முடியாது. ஏதேனும் தப்பு செய்து அவர் முன் நிற்கும்போது, "டேய்... என் கண்ணைப் பார்த்துப் பேசுடா!" என்றுதான் சொல்வார். அப்போது கருவிழியில் சிறு மின்னல் பளிச்சிட்டு மறையும். 'கண்ணோடு கண் பார்த்துப் பேசினால், பொய் பேச வராது' என்று அடிக்கடி சொல்வார். வீட்டு வாசற்படியில் ஈரிழை சிவப்புத் துண்டை தோளில் போட்டுக் கொண்டு, கால் மேல் கால் வைத்து, அப்பா சார்மினார் சிகரெட் பிடிக்கும் அழகை தெருவே பேசும். 60 வயதுக்குமேல் தான் அப்பா கண்ணாடி அணியத் தொடங்கினார். அந்தக் கண்ணாடி அவ்வளவு சுத்தமாக இருக்கும். மஞ்சள் கலர் துணியைக் கொண்டு அடிக்கடி துடைத்துக் கொண்டே இருப்பார். கண்களில் லேசாகத் தூசு விழுந்தால் கூட, 'சங்கரா....இந்தக் கண்ணு மருந்தைக் கொஞ்சம் போட்டுட்டுப் போப்பா' என்று சொல்வார்.

சங்கரன் பைக் வாங்கி முதன்முதலாக அதில் வேலைக்கு புறப்பட்டபோது, 'ஏதாவது கண்ணாடி வாங்கிப் போட்டுட்டு போப்பா. ரோட்ல ரொம்பத் தூசியா இருக்கும்!' என்று அவன் அப்பா சொன்னது சங்கரனுக்குள் இப்போதும் எதிரொலித்தது.

டாக்டர், தனது வேலையை முடித்துக் கொண்டு வெளியே வந்தார். அப்பாவின் உடலை நோக்கி மலர்வளையங்களும் மாலைகளும் சென்றன. 'எது கேட்டாலும் கொடுக்கற எங்க ராசா....செத்தும் கண் கொடுத்த மகராசா...' என்று ஒப்பாரிக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. சங்கரனின் அப்பா கண் தானம் கொடுத்த தகவல், காட்டுத் தீ போல ஏரியா முழுதும் பரவியது.

அப்பாவை இடுகாட்டுக்கு அழைத்துச் செல்ல பல்லக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. அவரைக் குளிப்பாட்டினார்கள். தேவாரம் பாடியபடியே கட்டியங்காரர் அப்பாவின் நெற்றியில் திருநீறு பட்டையை எடுத்து அப்பினார். சங்கரன் கண்களை மூடிக்கொண்டான்!

"அப்பாவின் கண், இனி யாருக்கோ பொருத்தப்படுமாம். ஒருவரிடமிருந்து பெற்ற கண்களை இருவருக்குப் பொருத்துவார் களாம்" என்று, மறுநாள் காலை பத்திரிக்கையில் அப்பா கண்தானம் கொடுத்த செய்தியைப் படித்துவிட்டு அண்ணன், சங்கரனிடம் சொன்னான்.

நாட்கள் ஓடின. மூன்று மாத காலம் கழிந்த நிலையில், நகரின் பிரபலமான கண் மருத்துவமனை ஒன்றிலிருந்து சங்கரன் வீட்டுக்குக் கடிதம் ஒன்று வந்தது. அது, அப்பா கண் தானம் அளித்ததற்கு நன்றி தெரிவித்து வந்த கடிதம். அப்பா தானமாக அளித்த இரண்டு கண்களில் ஒன்று பழுதாகி இருந்ததாம். அவருடைய வலது கண்ணை மட்டும் எடுத்து ஒருவருக்குப் பொருத்தி இருக்கிறார்களாம். அவருக்குப் பார்வை திரும்பக் கிடைத்துள்ளதாம். இது தொடர்பான மகிழ்ச்சியையும் அந்தக் கடிதத்தில் மருத்துவமனை நிர்வாகம் பகிர்ந்திருந்தது.

கடிதத்தைப் படித்ததும் சங்கரன் பெருமூச்சு விட்டான். அப்பாவின் கண் இப்போதும் வாழ்கிறது என்று உள்ளுக்குள் மகிழ்ந்தான். அப்பாவின் கண்ணை யாருக்குப் பொருத்தியிருப்பார்கள்? அவர் எப்படி இருப்பார். அவரைப் பார்க்கலாமா? என்றெல்லாம் சங்கரனுக்குள் கேள்விகள் எழுந்தன.

ஆவல் உந்தித் தள்ள அந்தக் கண் மருத்துவமனைக்குச் சென்றான். அப்பாவின் பெயரைச் சொல்லி, "அவருடைய கண்ணை யாருக்குப் பொருத்தியிருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அந்தத் தகவலை யாருக்கும் சொல்ல மாட்டோம் என்று மருத்துவமனை வரவேற்பாளர் கூறினார். தலைமை மருத்துவரைச் சென்று பார்த்தான். அவரும் கைவிரித்துவிட்டார். சங்கரன் எப்படிக் கேட்டும் அவனது முயற்சி அங்கு பலன் அளிக்கவில்லை. ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான். ஆனால், அப்பாவின் கண்ணால் உலகைப் பார்க்கும் அந்த மனிதனைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் மட்டும் அவனிடம் நீர்த்துப் போகவில்லை.

சிலநாட்கள் கழித்து, வேறொரு வேலையாக கண் மருத்துவமனைக்கு இருக்கும் தெருவுக்குள் போய்க் கொண்டிருந்தான். "இந்த முறை கேட்டுப் பார்க்கலாம்" என்று மனதுக்குள் நினைத்த சங்கரன், தன்னுடைய டூ வீலரை வாசலில் நிறுத்திவிட்டு, மருத்துவ மனைக்குள் நுழைந்தான். தலைமை மருத்துவரின் அறைக்கு முன்னர் இருந்த நாற்காலியில் அமர்ந்து காத்திருந்தான். "இந்த முறை எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி, அப்பாவின் கண் பொருத்தப்பட்ட அந்த மனிதரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்" என்ற உறுதியை மனதுக்குள் ஏற்படுத்திக் கொண்டான். டாக்டரின் அறையில் இருந்து ஒருவர் வெளியே வந்ததும், இவன் முறை வந்து உள்ளே நுழைந்தான்.

"டாக்டர் நான் சங்கரன்...என் அப்பா கண் தானம் செஞ்சிருக்கார். அவருடைய கண்ணை யாருக்குப் பொருத்தியிருக்கீங்கனு தெரிஞ்சுக்கணும். நான் ஏற்கெனவே இங் வந்து கேட்டேன்.." என்று இழுத்தான்.

"ஸாரி ஸார்.....நான்தான் ஏற்கெனவே உங்ககிட்ட சொன்னேனே...ஒருத்தரோட முழுக் கண்ணையும் எடுத்து இன்னொருத்தருக்குப் பொருத்த முடியாது. கருவிழிகளைத்தான் எடுத்துப் பொறுத்துவோம். உங்க அப்பாவோட கருவிழியைத் தானமா வாங்கினவங்களை நீங்க பார்க்கணும்னு சொல்ற உங்க உணர்வை நான் மதிக்கிறேன். அதே நேரம் தானமா வாங்கினவங்களுக்கு உங்களைப் பார்க்கும்போது, அவங்க மேலேயே அவங்களுக்கு ஒருவித பரிதாப உணர்வு வரலாம். நீங்க அவங்களை அடிக்கடிப் பார்க்கப் போனீங்கன்னா, 'நாம இவன் அப்பாக்கிட்டேயிருந்துதானே கண்ணைத் தானமா வாங்கினோம். என்ன இருந்தாலும் இது நம்ம கண்ணு இல்லையே'ங்கிற தாழ்வு மனப்பான்மை அவங்களுக்கு வரும். அது அவங்க மனசைப் பாதிக்கும். தவிர, நீங்க பார்க்கும்போது உருவாகிற ஒரு எமோஷனல் பாண்டிங்கை அவங்க விரும்பாமக் கூட

இருக்கலாம். அதனால்தான் சொல்றேன்." உளவியல் காரணங்களைச் சொல்லி சங்கரனைத் தவிர்த்தார் டாக்டர்.

"அது வந்து....டாக்டர், ப்ளீஸ்.. என் அப்பாவோட கண்களை...." என்று மீண்டும் சங்கரன் ஆரம்பித்தபோது...

கொஞ்ச நேரம் அவனைத் தீர்க்கமாகப் பார்த்த டாக்டர், "தயவுசெஞ்சு புரிஞ்சிக்கங்க..." என்று சொல்லிவிட்டு, அடுத்த நோயாளியை அழைப்பதற்கான மணியைப் பலமாக அழுத்தினார். வெளியே இருந்து வயதான ஒரு பெண்மணி, கறுப்பு கண்ணாடி அணிந்தபடி தட்டுத்தடுமாறி உள்ளே நுழைந்தார். சங்கரன் எழுந்து அந்தப் பெண்மணியைப் பிடித்து தன்னுடைய நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு டாக்டரைப் பார்த்தான். "இதுதான் உங்க முடிவா... அந்த ரகசியத்தைச் சொல்ல மாட்டீங்களா?" என்று கேட்பது போல இருந்தது அவனுடைய பார்வை. அவன் பார்த்ததை டாக்டர் கண்டுகொள்ளவே இல்லை. வந்திருந்த பெண்மணியின் கண்களைச் சோதிக்கத் தொடங்கிவிட்டார்.

நிலைமையை உணர்ந்த சங்கரன், அந்த அறையில் இருந்து வெளியேறி வாசலுக்கு நடந்தான். அப்போது ஒரு கை அவனைப் பற்றியது. அவன் திரும்பிப் பார்த்தான். அவன் கையைப் பிடித்தது, வரிசையில் அமர்ந்திருந்த ஒரு பெரியவர்.

"தம்பி...இந்தச் சொட்டு மருந்தை என் கண்ணுல கொஞ்சம் போட்டுவிடுப்பா" என்றார்.

மருந்தை அவரிடமிருந்து வாங்கி, "எந்தக் கண்ல போடனும்" என்று கேட்டான்?அவர் தன்னுடைய வலது கண்ணைக் காண்பித்தார். அதில் மருந்து போடும்போது அந்தக் கருவிழியை உற்றுப் பார்த்தான். அப்பா கண்டிக்கும்போது அவரது கருவிழியில் ஒரு மின்னல் தோன்றி மறையுமே. அந்தச் சிறு மின்னல் பளிச்சிட்டு அது. அவனை வாஞ்சையோடு ஈர்த்தது. 'அப்போ இது...அப்பாவின் கருவிழியா?' சங்கரனின் உடலில் மீண்டும் மின்சாரம் பாய்ச்சியது போன்றதோர் உணர்வு. அப்போது பெரியவரின் விழி மீது மருந்து சொட்டுகள் விழ, இமைகள் மூடிக்கொண்டன. மூடிய வலது இமையின் ஓரமாக மருந்தும் கண்ணீரும் கலந்து வழிந்தது. சங்கரன் அதைத் துடைத்தான். கைகள் நடுங்கின. அவனது கண்களிலும் நீர் பெருக்கெடுக்கத் தொடங்கியது. !

* * *

## அப்பா !

எத்தனையோ கஷ்டங்கள், நஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், அசிங்கங்கள், அவமானங்கள் கடந்த பிறகும் ஒன்றுமே தெரியாதது போல் காட்டிக்கொண்டு, குடும்பத்தின் மத்தியில், சிரித்துக்கொண்டு இருக்கும் தந்தைக்கு நிகரான நம்பிக்கை ஊட்டும் புத்தகம், இந்த உலகில் வேரேதுமில்லை...

* * *

# 29. தாய்...தந்தை...தெய்வம்!

பீமா நதிக்கரையில் அமைந்துள்ள பண்டாரிபுரம், மகாராஷ்டிராவின் ஆன்மிகத் தலைநகரம். இந்தப் புனிதத்தலத்தில் பீமா நதி சந்திர பிறையைப் போல வளைந்து செல்வதால், அந்த நதி இங்கு சந்திரபாகா நதி எனப்பட்டது. சந்திரபாகா என்றால், பிறைச் சந்திரன் என்று பொருள்.

இந்தச் சந்திரபாகா நதிக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன், பாண்டுரங்கன் என்ற திருநாமத்துடன், தனது மனைவி ருக்மணியுடன் எழுந்தருளியிருக்கிறான். ஸ்ரீகிருஷ்ணன் பண்டரிநாதனாகக் கோயில் கொண்டதற்குப் பின்னணியில் சுவாரசியமானதொரு புராண நிகழ்வு பொதிந்திருக்கிறது.

மகாராஷ்டிராவில் வசிந்த வந்த ஜானுதேவர், சத்யவதி தம்பதிக்குப் பிறந்த மகன் புண்டரீகன். பெற்றோரிடம் மிகுந்த மரியாதையும் பக்தியுமாக இருந்தவன். திருமணத்துக்குப் பின் மனைவியின் பேச்சால் அவர்களை அவமதிக்கத் துவங்கினான். மனம் நொந்து, பெற்றோர் காசி யாத்திரைக்குப் புறப்பட்டனர்.

“அவர்கள் மட்டும் எப்படிப் போகலாம்? நாமும் போக வேண்டும்” என்று பிடிவாதம் பிடித்தாள் புண்டரீகனின் மனைவி. காசி போகும் குழுவில் அவர்களும் சேர்ந்தனர். பெற்றோர் நடந்து வர, புண்டரீகனும் அவன் மனைவியும் குதிரையில் சவாரி செய்தனர். தவிர, பெற்றோரை எல்லோர் எதிரிலும் அவமரியாதை செய்யவும் புண்டரீகன் தயங்கவில்லை.

அவர்கள் எல்லோரும் குக்குட முனிவரின் ஆசிரமத்தில் தங்கி ஓய்வெடுத்தனர். விடியும் நேரத்துக்குச் சற்று முன்பாக, நைந்து போன ஆடைகளில் அழுக்கும் அருவருப்பான தோற்றமுமாக அழகான யுவதிகள் பலர் ஆசிரமத்துக்குள் நுழைவதைப் புண்டரீகன் பார்த்தான். அவர்கள் ஆசிரமத்தின் தரையைச் சுத்தம் செய்தனர். முனிவரின் உடைகளைத் துவைத்தனர். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து வைத்தனர். முனிவரின் அறையிலிருந்து வெளிப்பட்டபோது, அவர்கள் மிகச் சுத்தமான உடைகளைத் தரித்து தூய்மையின் அம்சங்களாக விளங்கினர்.

என்ன நடக்கிறது என்று புரியாமல் புண்டரீகன் தவித்தான். மறுநாள், அப்பெண்கள் அழுக்காக ஆசிரமத்துக்குள் வந்ததைக் கவனித்தான். வேலைகளை முடித்துவிட்டுத் தூய்மையாக வெளியே வந்தபோது, அவர்களை மறித்துப் பாதங்களில் விழுந்தான்.

‘நீங்கள் யார்?’ என வினவினான்.

‘கங்கை, யமுனை, சரஸ்வதி போன்ற பல புண்ணிய நதிகள் நாங்கள். மற்றவர் தங்கள் பாவங்களையெல்லாம் எங்களிடம் இறக்கி வைத்துவிட்டுத் தூய்மை பெறுகிறார்கள். தினமும் அந்தப் பாவங்களைக் களைய நாங்கள் இந்த ஆசிரமத்துக்கு வருகிறோம். தன் பெற்றோரை தெய்வங்களாக எண்ணிப் பார்த்துக்கொள்ளும் குக்குட முனிவருக்கு சேவை செய்வதால், எங்கள் பாவங்கள் கழுவப்படுகின்றன. மீண்டும் தூய்மை யடைந்து திரும்புகிறோம்’ என்று சொல்லி அவர்கள் மறைந்தார்கள்.

அக்கணமே புண்டரீகன் மனம் திருந்தினான். பெற்றோருக்குச் சேவை செய்வதையே தலையாய கடமையாகக் கொண்டான்.

**– சக்தி விகடன்**
25.01.2016

* * *

# 30. இளைஞர்களுக்கு படிப்பினை, முதியோர்களுக்கு நம்பிக்கை!

ஓர் உணவு விடுதியில் ஒரு வயதான தகப்பனும் இளம் வயது மகனும் உணவருந்த வந்தனர்.

தந்தைக்கு வயதானதால் அவரால் கைநடுக்கம் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதனால் உணவை எடுத்து சாப்பிட இயலவில்லை.

அதனால் மகன் ஊட்டிவிட முயற்சித்தான். அதையும் அவர் அனுமதிக்கவில்லை.

தானே சாப்பிட முற்பட்டு உணவை மேலேயும் கீழேயும் சிந்திக்கொண்டு அந்த பகுதியையே அசுத்தப்படுத்திக்கொண்டு இருந்தார்.

வாயில் ஜொள் வேறு! ஆனால் அந்த மகனோ சற்றும் அருவெறுப்பு இன்றி பொறுமையை இழக்காமல் அவரது வாயை, உடையை எல்லாம் சுத்தம் செய்ததும் இல்லாமல் கழிவறைக்கும் பொறுப்பாக கூட்டி சென்று சுத்தம் செய்து அழைத்து வந்தான்.

இதையெல்லாம் அங்கிருந்த கூட்டம் அருவெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்ததும் இல்லாமல் சிலர் வெளிப்படையாக முணுமுணுக்கவும் செய்தனர்.

சிலரோ அந்த பையனை கேலியுடன் பார்த்து சிரித்தவாறு இருந்தனர்.

இதையெல்லாம் பொருட்படுத்தாத பையன் பில் தொகையை செலுத்திவிட்டு கிளம்பினான்.

வாசல் வரை வந்த போது ஒரு கணீரென்ற குரல் தடுத்து நிறுத்தியது.

“தம்பி! நீ சிலவற்றை இங்கே விட்டு செல்கிறாய்” என்று ஒரு நடுத்தர வயதை தாண்டிய ஒரு நபர்தான் அவ்வாறு அழைத்தது!

பையனோ குழப்பத்துடன் சொன்னான்.

“நான் எதுவும் விட்ட மாதிரி தெரியலையே”

அதற்கு அவர் சொன்னார்.

“இரண்டு விசயங்களை நீ விட்டு செல்கிறாய்!”

முதலாவது இங்கே இருக்கும் இளைஞர்களுக்கு படிப்பினை!

இரண்டவது இங்கே இருக்கும் என்னை போன்றவர்களுக்கு நம்பிக்கை.

அங்கிருந்த அத்தனை பேரும் வாயடைத்து நின்றனர்.

* * *

# 31. பகவான் நாமா

ஸ்ரீ மஹா பெரியவாளை தரிசனம் பண்ண ஒரு பக்தர் வந்தார். கூட்டம் அதிகம் இல்லை.

“அப்பா எப்படியிருக்கார்?”

“அப்பாவுக்கு ரொம்ப ஓடம்பு முடியலே பெரியவா..ப்ரக்ஞை இல்லை, அதுனால ஆஸ்பத்ரியில் சேர்த்திருக்கேன்.”

மேலே சொல்லு என்பது போல் ஸ்ரீ மஹா பெரியவா உன்னிப்பாக கேட்டார்.

“பணம் பணம்னு ஆஸ்பத்ரியில் பிடுங்கி எடுக்கறா... ட்ரிப்ஸ் ஏத்தறதுக்கு பணம், ஆக்ஸிஜன் வெக்கறதுக்கு பணம், அதுக்கு இதுக்குன்னு நின்னா, ஒக்காந்தா பணம் ஒண்ணுதான் கேட்டுண்டே இருக்கா பெரியவா!...”

“அப்பாவுக்கு என்ன வயது?”

“ஸதாபிஷேகம் ஆயிடுத்து.”

அவரை டிஸ்சார்ஜ் பண்ணி அழைச்சிண்டு வந்துடு! வீட்டிலே ஒரு கட்டில்ல அவருக்கு சிரமம் இல்லாதபடி சௌகரியமா படுக்க வை; ஜாஸ்தி சூடு இல்லாம, வெதுவெதுன்னு கஞ்சி, பால் இதுமாதிரி குடு; அவரோட காதுல விழற மாதிரி தினமும் விஷ்ணு ஸகஸ்ரநாமம் சொல்லு, வீட்டிலே எல்லாருமா பகவான் நாமாவை சொல்லுங்கோ; ஆத்மார்த்தமா சிசுருஷை பண்ணு, இப்படி பண்ணினால் அவர் கடைசி காலத்தை நிம்மதியா கழிப்பார்..”

இப்போல்லாம் யாருக்கும் தர்மமே தெரியறதில்லே! வயதானவர்களுக்கு ஒடம்புக்கு கொஞ்சம் அசௌகர்யம் வந்துடுத்துன்னா...ஒடனே ஆஸ்பத்ரியில் சேர்த்துவிடுகிறார்கள். வியாதிக்கு மருந்து வேணுந்தான்.....வாஸ்தவம். ஆனா...... அருமருந்து ஒண்ணு இருக்குங்கறதே யாருக்கும் தெரியவில்லை!

பகவான் நாமா கைகொடுப்பது போல் எந்த மருந்தும் உதவி பண்ணாது, பகவான் நாமா பிழைக்கவும் வைக்கும். அதே சமயம் ஆயுள் முடியப்போகும் தருணத்தில், பகவானின் திருவடிப் பேற்றையும் சுலபமாக அளித்து விடும்.

எனவே வயதான நம் பெற்றோர், தாத்தா, பாட்டி போன்றோரை, அந்திம காலத்தில் கஞ்சி குடுத்தாலும், அதை அன்போடு குடுத்து, பகவானின் நாமத்தை சதா கேட்கவோ, சொல்லவோ வைத்து, அவர்களை நிம்மதியாக வீட்டிலே வைத்துக் கொள்வதே கடவுளுக்கு மிகவும் பிடித்த கைங்கர்யம்.

அவர்களுக்கு எந்தவித பரிசுகள் வேண்டாம். விதவிதமான உணவு வகைகள் வேண்டாம். உண்மையான அன்போடு ஒரு பத்து நிமிஷமாவது அவர்களுக்காக ஒதுக்கி, “சாப்பிட்டீர்களா? ஏதாவது வேண்டுமா?” என்று கேட்பதே அவர்களை மனதார நம்மை வாழ்த்த வைக்கும். கடைசி காலத்தில் அவர்கள் வாழ்ந்த வீட்டை விட, அது குச்சு வீடாக இருந்தாலும் சரி, தன் மக்களை விட்டுவிட்டு, வேறு எந்த பெரிய ஆஸ்பத்ரியிலும் “அவர்களால் நிம்மதியாக இருக்க முடியாது.”

மகன் மனதிருப்தியோடு பிரசாதம் பெற்றுக் கொண்டு சென்றார்.

* * *

# 32. பாசமிகு அப்பா

தனது அருமை மகளின் திருமணத்திற்குப் பின் பெண்ணின் தந்தைக்கு நேரும் உணர்வுப் போராட்டம் சொற்களில் அடங்காதது. அவ்வாறாக உணர்ச்சி வசப்பட்ட ஒரு தந்தையின் மிகவும் உருக்கமான, யதார்த்தமான இயல்பான எண்ணங்கள் இதோ:

“இந்த உரையை எனது மகளின் புதிய குடும்பத்தினரே” என்று உங்களை வரவேற்று ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், அது பொருத்தமாக இருக்காது என்பதால் கடைசி நிமிடத்தில் அதை தவிர்த்துவிட்டேன். அவள்எப்போது திருமண பந்தத்தில் இணைந்தாளோ அப்பொழுதே உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவளாகிவிட்டாள். அதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை. இன்னும் சொல்லவேண்டும் என்றால் அவள் உங்கள் குடும்பத்தினருக்கே எப்போதும், எதிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

எனது மகளை திருமணம் செய்து கொடுத்து விட்டேன். இனி, இளைப்பாற விரும்புகிறேன். அதை அனுபவிக்க தயாராகிவிட்டேன். ஆனால், அதற்கு நீங்கள் அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். நான் எதிர்பார்ப்பதைவிட நீங்கள் அவளை மகிழ்ச்சியுடன் வைத்துக்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். அவள் என் வீட்டில் துள்ளித் திரிந்ததைவிட உங்கள் வீட்டில் மகிழ்ச்சி துள்ளலோடு இருப்பாள் என நம்புகிறேன். இருந்தாலும், எல்லா சராசரி தந்தையைப் போலவும் நான் இதை திரும்பத் திரும்ப சொல்கிறேன். “தயவுசெய்து அவள் மகிழ்ச்சிக்கு குறை ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்”

அவள் எப்போதுமே எனக்கு பாரமாக இருந்ததில்லை. இனியும் ஒருபோதும், பாரமாக கருதமாட்டேன். ஏனெனில், என் சுவாசம் இயல்பாக இருப்பதற்கும், என் இதழ்களில் புன்னகை பூப்பதற்கும் காரணம் அவளே. இருந்தும் அவளை நான் திருமணம் செய்து கொடுக்கிறேன். ஏனென்றால் அது ஓர் இயற்கை நியதியாக இருக்கிறது. கலாச்சாரத்துக்கு கட்டுப்பட்டு மட்டுமே அவளை உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். என் வீட்டின் மகிழ்ச்சிப் பேழை உங்கள் வீட்டில் ஒளி வீச வருகிறது. எனது உலகத்தை உங்களுக்கு தாரை வார்த்துத் தருகிறேன். அந்த உலகம் என்றென்றைக்கும் அழகாக இருப்பதை நீங்களே உறுதி செய்ய வேண்டும். எனது வீட்டு இளவரசியை

உங்களிடம் அனுப்புகிறேன். அவள் உங்கள் வீட்டின் ராணியாக திகழ வழிவகை செய்யுங்கள். எனது ரத்தமும், வியர்வையும் அவளை ஆளாக்கியிருக்கிறது. இப்போது அவள் மாசறு பொன்னாக இருக்கிறாள்.

அவள் உங்கள் வீட்டுக்கு கொண்டு வரும் அன்பு, அக்கறை, அரவணைப்பு, அழகு, இதம் என எல்லாப் பண்புகளுக்கும் பரிசாக அவளுக்கு மகிழ்ச்சியைத் தாருங்கள். ஆம். அவளை தயவுசெய்து மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

எப்போதாவது அவள் சிறு தவறு செய்து விட்டாள் என நினைத்தால் அவளை தாராளமாக திட்டுங்கள். ஆனால் அதேவேளையில், அவள் மேல் செலுத்தும் அன்பில் குறைவைக்காதீர்கள். அவள் மிகவும் நளினமானவள். அவள் எப்போதாவது துவண்டு போய் இருந்தால் அவளுடன் இருங்கள். உங்களது சிறு கவனம் அவளுக்கு போதும், ஆறுதல் தர. அவள் உடல்நலன் பாதிக்கப்பட்டால் அவள் மீது அக்கறை காட்டுங்கள். அதுவே அவளுக்கு அருமருந்து.

அவளது பொறுப்புகளில் எப்போதாவது விலகி விட்டால் அதைச் சுட்டிக்காட்டுங்கள். அதேவேளையில், 'நீ இன்னும் வாழ்க்கையை கற்றுக் கொண்டிருக்கிறாய் என நாங்கள் நம்புகிறோம்' என அவள் உணரும்படி நடந்து கொள்ளுங்கள். அவளைப் புரிந்து கொள்ளுங்கள். தயவு செய்து அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

அவளை மாதக் கணக்கில் காண முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. அவள் குரலை தினம் தினம் கேட்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. உங்கள் வீட்டுக்கு வந்தபிறகு அவளுக்கு என் நினைவே வரவில்லை என்றால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். **என் மகளின் மகிழ்ச்சி மட்டுமே என் வாழ்நாள் லட்சியம்.** எனவே, தயவுசெய்த அவளை மகழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

அன்பிற்குரிய மருமகனே....இந்த வார்த்தைகளின் அர்த்தம் இப்பொழுது உங்களுக்கு புரியாமல் போகலாம். ஆனால், நாளை நீங்கள் ஒரு மகளைப் பெற்றெடுக்கும் பாக்கியவான் ஆகும்போது எனது வார்த்தைகளின் அர்த்தம் புரியும். அப்பொழுது உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் 'என் மகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்' என்று சொல்லும். எனவே, தயவு செய்து எனது மகளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

* * *

# 33. தேவாம்ருதம்

காய்ச்சிய பாலில் புத்தம் புதிதாக இறக்கிய டிக்காஷனையும் சுகர் ஃப்ரீயையும் கலந்து ஆவி பறக்க, மணக்க மணக்க காபியை மாமனார் எதிரே இருக்கும் டீப்பாயில் கொண்டுவந்து வைத்தாள் காயத்ரி.

ஆவி பறக்கும் அந்தக் காபியை ரசித்துச் சுவைத்தப்படியே அன்றைய செய்தித்தாளில் மூழ்கி விடுவார். எழுபத்து ஐந்து வயதைக் கடந்துவிட்ட வெங்கட்ரமண தீட்சிதர்.

அதன்பிறகு அவரது மருமகளான காயத்ரியின் கைக்காரியங்கள் அத்தனையும் சாட்டையிலிருந்து விடுபட்ட பம்பரம்தான் !

விஷ்ணு ஸகஸ்ரநாமத்தையோ, கந்த சஷ்டி கவசத்தையோ ஜெபித்தபடி, முதல் நாள் மாமனார் கொடுத்த லிஸ்ட் பிரகாரம் சாம்பார், ரசம், பதார்த்தங்களை மணக்க மணக்கச் செய்து, பத்து அல்லது பதினோரு மணி அளவில் மாமனார் தானே எடுத்துப் போட்டுக் கொண்டு, சாப்பிடக்கூடிய அளவிற்கு ஹாட் பேக்கில் எடுத்து வைத்துவிட்டு, அதேபோன்று இன்னொரு ஹாட் பேக்கில், அடுத்த தெருவில் குடியிருக்கும் கிட்டத்தட்ட எழுபது வயது நிரம்பிய தனது தாயார் மீனாட்சி யம்மாளுக்கும் எடுத்து வைத்துக் கொண்டு, தானும் ஒரு கவளம் வாயில் போட்டுக் கொண்டு, மதியம் சாப்பிடுவதற்கு ஏதாவது ஒரு டிபனையும் டப்பாவில் போட்டுக்கொண்டு அலுவலகம் கிளம்பும்போது காலை மணி சரியாக ஒன்பது ஆகிவிடும் !

இதற்கிடையே ஐந்து வயது நிரம்பிய தனது குழந்தை பவித்ராவை எழுப்பி அவள் காலைக் கடன்களை முடிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து, அன்றைய பாடத்தைப் படிக்க வைத்து, சீருடையை அணிய வைத்து எட்டரை மணிக்கு வரும் பள்ளிப் பேருந்தில் அனுப்பி வைத்தாக வேண்டும் !

இடையில் அம்மாவிற்காக தயார் செய்த உணவை அம்மாவிடம் ஒப்படைத்துவிட்டு, அவசர அவசரமாக, அலுவலகம் நோக்கிப் பறந்தாக வேண்டும் !

மனைவியை இழந்த வெங்கட்ரமண தீட்சிதர் ஒருபுறம், கணவனை இழந்த மீனாட்சி யம்மாள் ஒருபுறம்! அமெரிக்காவில் வேலை பார்க்கும் காயத்ரியின் கணவனும், வெங்கட்ரமண தீட்சிதரின் மகனுமாகிய பாலசுப்ரமணியன் ஒருபுறம், காயத்ரியின் ஒரே மகள் பவித்ரா ஒருபுறம், இவர்களுக்கு மத்தியில் எந்தவித சலனமோ, சலிப்போ இல்லாமல் சந்தோஷமாகவே தனது வாழ்க்கையில் பயணித்துக் கொண்டிருந்தாள் காயத்ரி! இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் எப்போதும்போல, அன்றும் காயத்ரி தன் அலுவலகம் நோக்கிப் புறப்பட்டாள்.

அவள் விடை பெற்றுச் சென்ற அடுத்த கணமே வெங்கட்ரமண தீட்சிதர் தன் இருக்கையை விட்டு எழுந்தார். ஸ்நானம் செய்தார். அன்றாட அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டார். காயத்ரி மந்திரத்தை ஜெபித்தபடி வெகுநேரம் இறைவன் முன்னால் இரு கரங்களையும் கூப்பியபடி தியானித்தார். பிறகு தன்னையும் அறியாமல் இறைவனிடம் இறைஞ்சினார் !

“இறைவா நான் உன்னிடம் பெரிதாக என்ன வேண்டும் என்று வேண்டிக் கொண்டு விட்டேன்? வீடு வாசல் வேண்டும் என்று

வேண்டிக் கொண்டேனா? நிலம் நீச்சு வேண்டும் என்று வேண்டிக் கொண்டேனா? காசு பணம் வேண்டும் என்று வேண்டிக் கொண்டேனா? எதுவுமே பெரிதாக வேண்டும் என்று வேண்டிக் கொள்ளவில்லையே இறைவா! நான் பெற்ற என் மகனுக்கு சரஸ்வதி கடாஷத்தைக் கொடு என்று கேட்டேன். கொடுத்தாய். நல்ல உத்யோகத்தைக் கொடு என்று கேட்டேன். கொடுத்தாய்! நல்ல சம்பாத்யத்தைக் கொடு என்று கேட்டேன். கொடுத்தாய்! நல்ல புத்தியைக் கொடு என்று கேட்டேன். கொடுக்காமல் போய் விட்டாயே இறைவா! நான் என்ன பாவம் செய்தேன் இறைவா? ஸ்ரீவித்யா உபாசகனான எனக்குப் போய் ஏன் இந்த சோதனை இறைவா? "

முதல் நாள் அமெரிக்காவிலிருந்து அவரது மகன் அனுப்பிய ஓர் இ.மெயிலைப் பார்த்துத்தான் அவர் இறைவனிடம் அந்தக் கதறு கதறினார்!

அன்புள்ள அப்பாவிற்கு,
நமஸ்காரம். இன்னும் மூன்று மாதத்தில் நான் சென்னை வர உள்ளேன். அதற்கு முன்னால் சில காகிதங்களை அனுப்பி வைக்கிறேன். அதில் காயத்ரியைக் கையெழுத்துப் போட்டுத் தயாராக வைத்து இருக்கச் சொல்லவும். இது வேறொன்றும் இல்லை. எங்களது விவாகரத்துப் பத்திரம்தான்! ஆம். இனிமேலும் அவளோட சேர்ந்து வாழ என்னால் இயலாது. நான் எத்தனையோ முறை அவளுக்குப் படித்துப் படித்துச் சொல்லிவிட்டேன். குழந்தையை அழைத்துக் கொண்டு நீயும் அமெரிக்காவிற்கு வந்து விடு. நாம் இருவரும் சேர்ந்தே இங்கு குடும்பம் நடத்தலாம். என் அப்பாவையும், உன் அம்மாவையும் ஏதாவது ஓர் உயர்தர முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடலாம் என எத்தனையோ முறை கூறிவிட்டேன். ஆனால் அவள் பிடி கொடுத்து பேசவே மாட்டேன் என்கிறாள். இனிமேலும் என்னால் இங்கே தனியாக வாழ முடியாது. ஒன்று அவள் இங்கே வரவேண்டும், இல்லை அவள் என்னை விவாகரத்து செய்துவிட வேண்டும். இரண்டில் ஒன்று நடந்தே ஆக வேண்டும். அவள் அங்கு இருக்கும் பட்சத்தில் அவள் வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அநேகமாக அவள் அதைத்தான் விரும்புகிறாள் போலும். குழந்தையை அவள் இஷ்டப்படி அவளே வைத்துக்கொண்டாலும் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. நானும் இங்கு வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு சந்தோஷமாக இருந்துவிட்டுப் போகிறேன்! இதை அவளிடம் கறாராகச் சொல்லி விடுங்கள். நான் அங்கு வரும்போது இரண்டில் ஒன்று முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இப்படிக்கு
பாலு.

இப்படிப்பட்ட செய்தியைப் படித்துவிட்டுத்தான் மனம் பதைபதைத்துப் போனார் வெங்கட்ரமண தீட்சிதர். அதனால்தான் இறைவனிடம் கத்தினார், கதறினார், நேரம் போவதே தெரியாமல் இறைவன் முன் அமர்ந்து அழுதார், புலம்பினார்.

உணவை மறந்தார், உறக்கத்தை மறந்தார், தன்னை மறந்தார். அமர்ந்தது அமர்ந்தபடி அங்கேயே இறைவனோடு லயித்துவிட்டார்!

மாலை காய்த்ரி வீடு திரும்பினாள். மாமனார் பூஜை அறையிலேயே அமர்ந்து இருப்பதைக் கண்ட திடுக்கிட்டாள். சாப்பாடு வைத்தது வைத்தபடி இருப்பதைக் கண்டு அதிர்ந்து போனாள்!

என்னப்பா, உடம்பு சரியில்லையா? சாப்பிடக்கூட இல்லையே! எனக் கூறியபடியே அவர் அருகில் சென்றாள்.

ஒன்றுமில்லையம்மா எனக் கூறியபடியே மெல்லத் தடுமாறியபடியே எழுந்தார்!

அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்தாள் காயத்ரி. உடம்பு லேசாகச் சுட்டது!

அப்பா, ஜுரம் இருக்கிறது அப்பா! டாக்டரிம் அழைத்துச் செல்லட்டுமா?

அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா, கொஞ்சம் படுத்தால் சரியாகிவிடும்.

சரி படுங்கள். இப்போது சூடாக ஒரு காப்பி போட்டுத் தருகிறேன். சாப்பிடுங்கள். ராத்திரி கண்டதிப்பிலி ரசமும், சுட்ட அப்பளமும் செய்து தருகிறேன். சாப்பிடுங்கள். எல்லாம் சரியாகிவிடும் எனக் கூறியபடியே அவரை மெதுவாக சாய்வு நாற்காலியில் அமர வைத்தாள்.

ஐயோ, பெற்றெடுத்த மகள் கூட இப்படி தாங்கு தாங்கு என்று தாங்க மாட்டாளே! இந்த மஹாலஷ்மியைப் போய் விவாகரத்து செய்யப் போகிறேன் என்கிறானே! பாவி..மஹாபாவி! எனத் துடித்துத்தான் போய்விட்டார் தீட்சிதர்!

இரவு சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்கிவிட்டார்.

மாமனார் மனதை ஏதோ ஒரு விஷயம் சஞ்சலப்படுத்துகிறது என்பதை மட்டும் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டாள் காயத்ரி.

நாட்கள் வேகமாக ஓடின. மூன்று மாதங்கள் ஓட்டமாய் ஓடிவிட்டது! பாலசுப்ரமணியன் அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்தான்.

இரண்டு, மூன்று நாட்கள் யாரும் யாருடனும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை!

நான்காவது நாள் இரவு நேரத்தில் காயத்ரிதான் வலியச்சென்று பாலுவிடம் பேசினாள்.

“பாலு உங்களிடம் கொஞ்சம்நேரம் பேச வேண்டும்.

உன்னிடம் பேசுவதற்கு ஒன்றுமில்லை! எல்லாவற்றையும் அப்பாவிடம் சொல்லி விட்டேன். அப்பா உன்னிடம் சொன்னாரா? இல்லையா?

அப்பா வாயைத் திறந்து என்னிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் உங்கள் இ–மெயிலை நான் படித்துவிட்டேன்!

பிறகு என்ன? நான் அனுப்பிய பத்திரத்தில் கையெழுத்துப் போட வேண்டியதுதானே?

போடுகிறேன். ஆனால் அதற்கு முன்னால் ஒரு நிபந்தனை!

என்ன?

உங்களை விவாகரத்து செய்த பின்னால் நீங்கள் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளுங்கள். அதுகுறித்து எனக்கு கவலை இல்லை. ஆனால், நம் குழந்தையும் உங்கள் அப்பாவும் என்னோடுதான் இருக்க வேண்டும். உங்கள் அப்பாவை எக்காரணம் கொண்டும் முதியோர் இல்லத்தில் சேர்க்க நான் அனுமதிக்க மாட்டேன்! பத்திரத்தில் இந்த நிபந்தனையையும் சேர்த்து விடுங்கள். இதோ இப்போதே கையெழுத்துப் போட்டு விடுகிறேன். ஆனால், நான் இன்னொரு திருமணம் செய்து கொள்ள மாட்டேன் . இது உறுதி. சம்மதமா?

என் அப்பாவைப் பற்றி உனக்கென்ன கவலை?

எப்போது உங்களைத் திருமணம் செய்து கொண்டேனோ, அப்போதே உங்கள்அப்பா என் அப்பா ஆகிவிட்டார், உங்கள்விருப்பப்படி உங்களைத்தான் என்னால் விவாகரத்து செய்ய முடியம். உங்கள்அப்பாவைப் போன்ற ஒரு மஹானை என்னால் இழக்க முடியாது! இந்த வயதான காலத்தில் அவருக்குத் துணையாக நான் இருந்துதான் ஆக வேண்டும். அதேசமயத்தில் அவரை ஒரு முதியோர் இல்லத்தில் சேர்க்க முடியாது! அதேநேரத்தில் இந்த முதிர்ந்த வயதில் அவர்களை நாம் வெளிநாட்டிற்கம் அழைத்துச் செல்ல முடியாது!

அதான் அவரை ஓர் உயர்தர முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடலாம் என்று சொன்னேனே!

பாதுகாப்பாக இருக்கட்டும் என எண்ணி உங்கள் இரு கண்களையும் ஏதாவது ஒரு பேங்க் சேப்டி லாக்கரில் வைத்துவிட்டு, உங்களால் வெளியில் செல்ல முடியுமா?

என்ன சொல்கிறாய் காயத்ரி?

ஆம். என் அம்மாவும் சரி, உங்கள் அப்பாவும் சரி, எனக்கு இரு கண்கள். அவர்களை வங்கி பேங்க் சேப்டி லாக்கரில் வைப்பதுபோல், ஒரு முதியோர் இல்லத்தில் வைத்துவிட்டு, நாம் வெளியூர் செல்வதை ஒருநாளும் நான் அனுமதிக்க மாட்டேன். அவர்கள் நம் வழிகாட்டிகள்! உயிர் உள்ள ஜீவன்கள்! அவர்கள் எப்போதும் நம் கூடவே இருந்து நம்மை வழிநடத்திச் செல்லக்கூடிய மஹான்கள்! அவர்களைப் போய் முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு நாம் மட்டும் வெளிநாடு சென்று சுகமாக வாழலாம் என்கிறீர்களே, உங்களுக்கு மனசாட்சியே கிடையாதா? இந்த அளவுக்கா உங்கள் மனதில் ஒரு சுயநலம் புகுந்து விளையாட வேண்டும்? இப்படியும் ஒரு வெளிநாட்டு மோகமும் பணத்தாசையும் நமக்குத் தேவைதானா?"

காயத்ரி மேலும் தொடர்ந்தாள்...

"எப்பேர்ப்பட்ட மஹான் உங்கள் தந்தை? அப்படிப்பட்டவருக்குப் போய் இப்படி ஒரு இ.மெயிலா? அவர் மனம் என்ன பாடுபட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா? இதுநாள்வர அந்த மஹான் அந்த இ–மெயிலை என்னிடம் காட்டக்கூட இல்லை! அது தெரியுமா உங்களுக்கு. நான்தான் அவர் மனம் படும்பாட்டைப் புரிந்துகொண்டு, அவர் இல்லாத நேரத்தில் அதைப் படித்துத் தெரிந்து கொண்டேன். கடந்த மூன்றுமாத காலமாக அந்தப் பெரியவர் ஊண் உறக்கமின்றி தவியாய் தவித்துப் போய்விட்டார் பாலு.

போதும் காயத்ரி போதும், என்னை மன்னித்து விடு. நான் மகாபாவம் செய்துவிட்டேன்! அப்பாவிடம் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு விடுகிறேன். உடனடியாக அமெரிக்கா வேலையை ராஜினாமா செய்துவிட்டு, சென்னையிலேயே செட்டில் ஆக முயற்சி செய்கிறேன். நான், நீ, குழந்தை, என் அப்பா, உன் அம்மா எல்லோரும் ஒரே இடத்தில் இருக்கலாம். என்னை மன்னித்து விடு காயத்ரி. என்னை மன்னித்து விடு!"

கதவின் ஓரத்தில் நின்று கொண்டு இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார் வெங்கட்ரமண தீட்சிதர்.

கடவுளே கடந்த மூன்றுமாத காலமாக இந்தப் பிரச்சனையை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று தவியாய்த் தவித்துக் கொண்டு இருந்தேனே! என் மருமகள் காயத்ரி மூன்றே நிமிடத்தில் பிரச்னைக்கு ஒரு தீர்வு கண்ட விட்டாளே! தெய்வமே நான் உன்னிடம் அமுதத்தைத்தான் யாசித்தேன். ஆனால், நீ தேவாமிருதத்தையே கொடுத்துவிட்டாய்! உன் கருணையே கருணை! உருகித்தான் போய்விட்டார் தீட்சிதர்.

**– ஷிவ்ராம்**

✻ ✻ ✻

# 34. MOTHER AND FATHER CANNOT BE COMPARED

| MOTHER | FATHER |
|---|---|
| One who loves till you close your eyes, is a **"Mother"**. | One who loves without an expression in the eyes, is a **"Father"** |
| Introduces you to the world. | Introduces the world to you. |
| Gives you life | Gives you living |
| Makes sure you are not starving. | Makes sure you know the value of starving |
| Personifies Care | Personifies Responsibility |
| Protects you from a fall | Teaches you to get up from a fall. |
| Teaches you walking. | Teaches you walk of life |
| Teaches from her own experiences. | Teaches you to learn from your own experiences. |
| Reflects Ideology | Reflects Reality |
| Mother's love is known to you since birth. | Father's love is known when you become a Father. |
| Enjoy what your father says.<br>Keep loving your mother. | |

* * *

**ஹலோ சார்,**

**முதியோர் காப்பகத்திலிருந்து பேசுகிறோம். 'நாய் காணவில்லை' என்று நீங்கள் செய்தித் தாளில் கொடுத்திருந்த விளம்பரத்தைப் பார்த்தோம்.**

**அது இங்கே உங்கள் பெற்றோரிடம் விளையாடிக் கொண்டிருக்கிறது. தேடாதீர்கள்.**

அன்னையர் தினம் : மே மாதத்தில் வரும் 2-ஆம் ஞாயிறு

தந்தையர் தினம் : ஜூன் மாதத்தில் வரும் 3-ஆம் ஞாயிறு